S. 287

ஓ

கடவுள் துணை.

# யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

# சுண்ணம் கூ.

இஃது

மதுரை யானைக்கல் தெரு, வித்துவான்

மூ. குழந்தைவேலுப் பிள்ளை அவர்கள்

கேட்டுக்கொண்டபடி.

---

மதுரை வித்துவான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

குருசாமிக் கோனர்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி,

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன்விலை] 1925. [அணா 14

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

கடவுள் துணை.

# யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

# சுண்ணாம்பு நூல்.

———:():———

ரகுமானின் பாதமலர் தஞ்சமேசெய்து
நபிமாரை அனுதினமும் போற்றி செய்து
கைகட்டி வணங்கியே சுண்ணக்காண்டம்
கனிந்துமே அறுநூறு முன்னேபாடி
வையகத்தி லறுநூறைத் தான்குருக்கி
வகையாக யிந்தநூல்முன் னூர்தன்னில்
மெய்யாகச் சுண்ணங்கள் வைக்கும்பாகம்
மேன்மைபெறப் பாடினேன்விருப்பாய்த்தானே. (1)

விருப்பமாய்க் களங்கோடி செந்தூரங்கள்
விதமான காரீயச்செந்தூரங்கள்
உருப்பமாய்த் தாளகமுஞ் சேர்க்குமார்க்கம்
உறுதிபெற்ற குதத்தின் சுண்ணத்தோடு
திருப்பாகக் கைபாக வரிசையோடு
செகத்திலென் பேர்விளங்கச் செப்பினேன்யான்
பொருப்பதனில் வீற்றிருந்து சொன்னேனப்பா
பேர்பெரிய நபிமாரைப் பேசினேனே. (2)

பேசினே னிந்தமுன்னூற தணைக்குருக்கிப்
பிரிதமே நூற்றைம்பத் தஞ்சதாக
வாசினையாய்ப் பாடினே னதிலேதானே
வகையாகக் கருவித்தை களங்கஞ்சுண்ணம்
காசிபெற மெழுகோடு தயிலமெல்லாம்
தாட்டிகமாய்ச் சொல்லிவிட்டேன் சரியதாக
பாசிதனைத் தள்ளிவிட்டு நீரைத்தானும்
பகுந்தெடுத்துச் சமையல்செய் ததுபோற்பாரே. (3)

பாரேதா னிந்தமுன்னூறு தன்னிலேதான்
பகுத்தறிந்து சீவனங்கள் செய்யவேண்டி
காரேரீ மூனனேதான் வங்கந்தன்னைக்
கருத்துடனே வைத்துமே செம்புதன்னில்
நீரேரீ பாயச்சிட்டு ஊதிப்போட்டு
நிணைவாக வித்துமே செலவுசெய்து
கூரேறு சீவனங்கள் பண்ணிக்கொண்டு
கோடிலெட்சம் வேலிபின்னே செய்துகொள்ளே. (4)

பண்ணிட்டு நபிமாரைத் தொழுதுபோற்றிப்
பதிவாக வங்கமென்ற ராஜாதன்னை
எண்ணிவே தொழுதுகொள்ளு பின்னே நன்ருய்
நலமான தாளகத்தைத் தொழுதுபோற்று
கன்றுவிட்டுப் பால்கறந்தாப் போலேதானும்
கடிதான கைபாக வரிசையாக
உன்னிடத்துப் போலேநீ செய்துகொண்டு
உணர்ந்தபடி யாகோபு வோதினேனே. (5)

ஓதினேன் வடமொழியைப் பிரித்துப்பார்த்து
உறுதிபெறக் கைபாக வரிசையாக
நீதியாய்ப் புத்திதனிற் பகுந்துசேறி
நிலைக்கமே வாதமென்ற வெள்ளந்தன்னை
சோதிபெறக் கண்டீமை சொன்னேன்பாரு
தொல்லுலகில் ரசவாதி பிழைக்கவென்று
கோதிவிடுங் கிளிபோலே கண்டுகொள்ளு
கூறினேன் பேரிளங்கை யாகோபுதானே (6)

## வங்கச் சுண்ணம்.

விளங்கவே அயச்சட்டி அடுப்பிலேற்றி
வெற்றிபெற வங்கமது சேருஞன்று
தளம்பவே சட்டியிட்டு ஐந்தாங்காய்ச்சல்
தனியான பொற்றலையை யிடையேயிட்டு
உளங்குளிரக் கொஞ்சமதா யிட்டுநன்ருய்
உறுதிபெற யிடைக்கிடைதா னிட்டுநீயும்
துளம்பெறவே வைத்திடுநீ சாமமொன்று
துடியாக யெடுத்துப்பார் மஞ்சளாமே. (7)

## வங்கச் சுண்ணச் செயதீர்.

மஞ்சளாம் வங்கமென்ற ராஜாதானும்
மயமாகக் கொஞ்சமெடு மஞ்சள்தன்னில்
அஞ்சாம லுரைத்துவிடு சிவந்துபோகும்
அடைவாகக் கடுஞ்சுண்ணம் வங்கச்சுண்ணம்
தஞ்சமாய்க் கல்வத்திற் பொடித்துநீயும்
தடையில்லாச் சாரமதை யிடையேயிட்டு
அஞ்சாமல் பொடிபண்ணிப் பீங்கானிலிட்டுத்
தடியாகப் பட்சமொன்று பனியில்லையே. (8)

பனியில்லைக்கப் பளபளெனச் செயநீராகும்
பாங்காக பின்னீரில வீரமிட்டு
தனியாக நீரிருத்திச் சீசாதன்னில்
தாக்கியடை பின்புதான் சாற்றக்கேளு
வளியாக அடியில்நின்ற புட்டிதன்னை
வடிவாகக் கல்வமிட்டு வளமைகேளு
கனிபோலே கற்றுழை நீரிலாட்டிக்
காரியமாய் வில்லைதட்டிக் கதிரில்வையே (9)

## வங்கத் துத்தச்சுண்ணம்.

கதிரில்வைத்துப் புடம்போட்டு யெடுத்துக்கொண்டு
காரணமாய்ப் பின்புதான் சொல்லக்கேளு
பதிவாகப் புடம்போட்ட காரீயத்தில
பத்தியாய் மடையனைதான் யிடையேசேர்த்து
விதிபெறவே கல்வமிட்டுப் புகைநீர்சேரு
விதமான வெடியுப்புப் பலமும்பத்து
கதியாகச் சீனமது யிருபத்தைந்து
காடியே கல்வமிட்டுப் பொடித்திடாயே. (10)

பொடித்திட்டுக் கடத்திலரை வாசியிட்டுப்
போக்கோடே வாலியென்ற சட்டிமூடி
வடித்திட்ட முன்னீரைத் தள்ளிப்போட்டு
வகையான பினனீரை வாங்கிநீயும்
தடித்திட்ட வங்கமென்ற துத்தத்தன்னில்
தானிட்டு அரைத்துமே வில்லைதட்டி
நடித்திட்ட கதிரில்வைத்துப் புடமுமிட்டு
காடியெடு பின்புதான் காடிக்கீகளே. (11)

## தாளகச் செந்தூரம்.

காடியே தாளகமுஞ் சேர்தானென்று
நல்லசுண்ணக் தன்னிலிட்டுப் பாணிவிட்டு
கூடியெரி ஒருசாமம் சுத்தியாச்சு
குணமாக வெடுத்துஅயச் சட்டியிட்டு
பாடியே முன்செயநீர் சுருக்குப்போடு
பதிவாக யிருசாமஞ் சென்றபின்பு
தேடியே கலமாகப் பிரித்து நீயும்
திட்டமாய் முன்போலே வங்கம்வாங்கே. (12)

வாங்கியே கல்வமிட்டுப் புகைநீராட்டி
வடிவாக ஒருபங்கு தாளகத்தில்
தேங்கியே புகைநீர்விட் டரைத்தவங்கம்
திடமாக நாலுபங்கு கவசங்கட்டி
பாங்கியே காயவைத்துப் புடமுஞ்சேவல்
பதிவாக் யிட்டுமே எடுத்துக்கல்வம்
தூங்கியே திரியாதே புகைநீராட்டித்
துடியாக யிருசாம மரைத்திடாயே. (13)

அரைத்துமே பின்புதான் தாளகத்தில்
அடைவாகக் கவசமிட்டுக் கதிரில்வைத்து
பரைத்துமே முன்போலே புடமுமிட்டுப்
பதிவாகக் கல்வத்தி லிட்டுநீயும்
தரைத்துமே புகைநீரை விட்டுச்சாமம்
தனியரைத்துப் பின்புதான் தாளகத்தில்
நரைத்துமே கட்டியே கதிரில்வைத்து
நலமாக முன்போலே புடத்தைப்போடே. (14)

## திருசுரவி வெடி சுத்தி

புடம்போட்டு யிப்படிநால் தரமுமானால்
பேரான கருஞ்சிவப்பு மாகுங்கண்டீர்
நடம்போடு நபிமாரைத் தொழுதுபோற்றி
நலமாகக் குருவைத்தா னெடுத்துப்பின்பு
வடம்போடு திருசதுவும் பலமும்பத்து
வாகான வெலுமிச்சம் பழச்சாறுவிட்டு
கடம்போடு உலரவைத்து ஒட்டக்காய்ச்சிக்
காமிட்டு உருக்கிடவே ரசியுமாமே. (15)

ஆமேதான் ரவிதன்னைத் தடுத்தட்டி
அடைவாகக் கழுதையுட அமுரிதன்னில்
ராமேதான் வெடியுப்பைக் கரைத்துரீயும்
கலமாகப் பழுக்கவே காய்ச்சித்தேய்ப்பாய்
காமேதான் தோய்த்துமே உருக்கிக்கொண்டு
கனிவாகச் செம்பினிடை சென்தூரத்தை
பூமேதான் தாக்கிப்பார் பொடியாய்ப்போகும்
புகழ்ச்சியைப் பின்புதான் பேசக்கேளே. (16)

பேசவே வெள்ளியது பலமும்மூன்று
பேராக நொருங்கினதோர் செம்புஒன்று
நாசவே கொடுத்துருக்கப் பொடியாய்ப்போகும்
நலமாகத் தங்கமொன்று சேர்த்துஊத
பாசமாய் மாத்துதான் யெட்டுமாகும்
பதியவே உப்புக்குங் காவிக்குர்தான்
வாசமா யோடாது கல்லமார்க்கம்
வகையாக யாகோபு சொன்னவாறே. (17)

சொன்னதொரு வாதத்தில் வங்காசன்
சுருதிபெற யில்லாது போனற்கேளு
சன்னபமாய் வாதமென்ற சொல்லேயில்லை
நலமான சத்துமில்லை களங்குமில்லை
இன்னிலத்தில் வர்ணமில்லை யியல்புமில்லை
இதமான சொர்ணமில்லை யின்பமில்லை
கன்னல்போல் கொட்டாவி யிட்டுயிட்டுக்
கலங்கியே புலம்பியே அலைகுவாரே. (18)

அலையாமல் வாதத்தின் கருவைக்கேளு
அடைவான வங்கமொன்று தங்கமொன்று
நிலையான நாகமொன்று துருசியொன்று
நேரான அயமனவும் இவைகள்சேரில்
கலையாமல் தங்கமது வாகுங்கண்டாய்
கணக்கதுபோல் சேர்ந்தாக்கால் கனிகளாகும்
விலையாகும் வெகுவித்தை யிதிலேயாச்ச
வித்தகாம் யாகோபு விளம்பினாரே. (19)

விளம்பவே புகைநீரு யில்லாதபோனல்
விதமான சத்துக்கள் பலிசமில்லே
துளம்பவே கைபாக வரிசைதப்பில்
தொல்லுலகில் ரசவாதம் பொய்க்குங்கண்டீர்
பழங்கலைதபோல் பேசாதே பருவமாகப்
பார்த்தமே செய்திடவே பலனுமாகும்
உளக்குளிரும் ரசவாத மேவலாகும்
உற்றுணர்ந்த யாகோபு ஓதினாரே. (20)

ஓதினார் சிலதுபேர் உலகந்தன்னில்
ஓதினதோர் சாஸ்திரத்தைப் பார்த்துப்பார்த்து
நீதிபாய் விசாரித்தினைத் தெரிபாதாலே
நிலையில்லே சாஸ்திரத்தைப் பொய்யேயென்று
கோதியே கிளிபோலே சாஸ்திரத்தைக்
குணமில்லே யென்றுமே சொல்லிப்பின்பு
நாதியா யானுவத்தால் சரக்கைப்பார்த்து
நான் செய்வேனென்றுமே சொல்லுவாரே. (21)

சொல்லியே ஆணுவத்தால் உலகத்திற்றான்
தயரமொடு வாதியைத்தான் கண்டுபேசி
வெல்லவே புல்லர்கள்தான் பத்துப்பேராய்
விதமாகக் கூடியே சுடுவார்கோடி
கல்லதூல் தண்ணீயே பாராமற்றான்
நாடியே பொய்சொல்லிப் புலம்புவார்கள்
வெல்லரிது வாதங்கள் வந்தாற்கேளு
வெளியிலே சொல்வார்கள் விருப்பமாமே. (22)

விருப்பமாய் வாதங்கள் வந்தபேர்கள்
விதமாகப் பயித்தியமாய்த் திரிவாரப்பா
அருப்பமாய்ப் பேசாக லுலகத்திற்றான்
அடைவாக கபிமார்போ லிருப்பாரப்பா
பொருப்புக்கு ளொளிந்திடுவார் புலம்பார்பேசார்
பொறுமையது மிகவுண்டு பொய்பேசார்கள்
இருப்பாக விருந்தமே செய்தவித்து
இதமாக வுண்டுபிப்பார் உதவினாரே. (23)

உறுதியாம் அறியாத வாதிமார்கள்
ஒருக்தருடன் சொல்லியே புலம்பிப்பின்னும்
அருதியாய் நான்கண்டே னென்றுசொல்லி
அலைந்துமே வயிரவன்போற் சுத்திச்சுத்தி
கருதியே பணமெல்லாஞ் சுட்டுக்கெட்டி
களிவாகப் பிச்சையெடுத் துண்டுவுண்டு
பருதிபோற் சுழன்றுமே மாளுவார்கள்
பத்தியிலலார் செய்கின்ற மார்க்கந்தானே. (24)

மார்க்கமாய்ப் பொய்சொல்லார் நிலைத்தவாதி
மாயங்கள் சொல்லார்கள் மார்க்கமாக
ஏற்கவே யிந்தநூல் தன்னைப்பார்த்து
ஏழைமதி போகாமல் மியல்புசெய்வார்
பார்க்குள்ளே தங்கத்தைப் பண்ணிவித்து
பத்தியாய்ப் பாகமாய்ச் செய்வார்பாரு
ஊர்க்குள்ளே கபிமார்கள் போலிருப்பார்
துயரமற்றுத்திரிவார்கள் சுருதியாமே. (25)

## வங்கச் சுண்ணம்.

சுருதியா யின்னுமொரு வங்கமார்க்கம்
சொல்லுகிறேன நபிமார்க ளாடும்கோலை
அருதியாய்க் காரியம் பலமும்பத்து
அடைவான அயச்சட்டி தன்னிலிட்டு
கருதியே உருகையிலே வெடியைத்தாக்கு
கணக்காக யிடைசமனுய்ப் போட்டுக்கிண்டு
பருதிபோற் சிவந்துநின்ற பருவம்பார்த்துப்
பத்தியொடு சுண்ணம்பாம் பாரிலோர்க்கே. (26)

பாரிலே வங்கமென்ற கண்ணந்தன்னைப்
பதிவாக மஞ்சள்தனி லிட்டுப்பாரு
காரியமாய்க் குருவிரத்தம் போற்சிவக்கும்
கணக்காகச் சுண்ணமதை பெடுத்துக்கல்வம்
ஊரியே யிட்டுமே சொல்லக்கேளு
உறுதிபெறக் கடையில்விற்கும் ரசச்செந்தூரம்
வாரியே வாங்கிவந்து நிரையைக்கேளு
வண்மைபெற மூன்சுண்ணத் திடையேசேரே. (27)

இடையாகக் கல்வமிட்டுப் புகைநீர்விட்டு
இழுத்தரைத்து வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நடையாகச் சேவலென்ற புடத்தையிட்டு
நாடியே பெடித்துமே கல்வத்திட்டு
படையாகப் புகைநீரை விட்டுச்சாமம்
பதியவரை வில்லைகட்டிக் கதிரில்வைத்து
விடையாக முன்போலே புடமுமிட்டு
விதமாக யிப்படிக்குப் புடமும்நாலே. (28)

நாலுபுடம் போட்டெடுக்க முருக்கம்பூப்போல்
நலமாகச் செந்தூர மாயிருக்கும்
காலுயெடு தருசினுட செம்புயெட்டில்
கணக்காக லன்றிட்டு உருக்கிப்பாரு
பாலுபோல் வெளிறியே உடையுங்கண்டாய்
பக்குவமா யுடைத்துமே மதியிலெட்டு
சாலவே லன்றிட்டுத் தங்கமொன்று
சாரித்துச் சேர்த்துமே ஊதிடாயே. (29)

ஊதியெடு மாத்துத்தான் சொல்லக்கேளு
உறுதியா பெட்டரைதா ணிக்கொக்கும்
சாதிதன்னிற் சொல்லாதே தங்கத்தன்னைத்
தாட்டிகமாய் வித்துமே செலவுசெய்து
நீதியாய் நமிமாரைப் போலிருந்து
நிலைபெற்று உண்டுடுத்து நினைவாய்நின்று
வேதியர்போல் நாலொன்றுக் கைந்துநேரம்
விதமாகத் தொழுதிடுநீ வேண்டிக்கொள்ளே. (30)

வேண்டியே தன்னிலையில் நின்றுநீயும்
விதமாகச் செந்தூரம் தேனிற்குனும்
கண்டுமே பணவிடைதான் வீதம் நித்யம்
கனிந்துமே மண்டலந்தா னுண்ணும்போது
தூண்டியே கடுகு நல்லெண்ணெய்கைப்புத்
துடியான எள்ளுமொச்சை பயறுதள்ளே
காண்டியமாய்க் காயமது யிரும்புத்தூளும்
கடிதாகுங் கற்போலாங் காயந்தானே. (31)

காயந்தானிப்படிக்கு யிருக்கிக்கொண்டு
கனகமது பண்ணியே உண்டுதேரு
காயன்மார் சொன்னபடி நூலைப்பார்த்து
கலமாக அறிந்தமே சோதித்துத்தான்
மாயமாய்ச் செய்தமே கடையில்வித்து
வடிவாக வறுமைபோ லுண்டுதேரு
சாயமது ரசவாதந் தரணியோர்க்குச்
சரிவரவே சோதித்தாற் பலனுமாமே. (32)

பலனுகச் சுண்ணமென்ற காண்டத்துள்ளே
பத்தியாய்ச் சோதித்து வங்கச்சுண்ணம்
பிலனுக வைத்தமே பாகமாகப்
பேதவித்துப் போகாமல் மனதைஊணி
நலமாக வைத்தமே செம்பிற்றுக்கி
நாட்டியே வித்தமே செலவுசெய்து
கலனுக உண்டுடுத்தித் தொழுதுதேரு
காரியமா யாகோபு சொன்னவாறே. (33)

சொன்னதொரு நூல்தனிலே வாதம்பொய்யோ
சுருதிதனி லறியாத மூடர்தானும்
கன்னயமாய்ப் பேசுவா ருலகநீதி
நாட்டிலே சாஸ்திரத்தை அறியமாட்டார்
கன்னல்போல் ருசியாகப் பேசுவார்கள்
கணக்கறியார் காரியத்தைக் காணமாட்டார்
இன்னிலத்திற் புலம்பியே திரிவாரப்பா
இழுக்கான வாதிதான் சோதிக்காரே. (34)

சோதிப்ப தெதுவென்றுற் சொல்லக்கேளு
சுயமான வங்கத்தைச் சுண்ணம்பண்ணு
நீதியாய் ரசவாத மேவல்கேட்கும்
நிலைக்குமே செம்புதான் தங்கமாகும்
பாதியிலே ரசவாதம் பார்த்துவிட்டுப்
பதைத்துமே யில்லையென்பார் பாரிலோரும்
வாதியே வெகுபாடு பட்டுப்பட்டு
உலுத்தாவர் சாஸ்திரத்தைப் பாரார்தானே. (35)

சாந்திரத்தைப் பார்த்துமே கருவையெண்ணிச்
சரியாக எல்லாநூல் தன்னைப்பார்த்து
சேத்திரமா யெல்லாமும் ஒத்துச்சேர்த்து
செயமாகப் பாகமாய்ச் செய்தாற்பாரு
பாத்திரமாம் பொன்னுகும் பணமுமாகும்
பதிவாக உண்டுடுக்க வாகும்பாரு
ஞஸ்திரமுட் சாந்திரமும் ஒத்துப்பாரு
கருக்காக வேதைவருந் தோய்வுமாமே. (36)

ஆமேதான் ஆணந்தான் காய்ச்சும்போது
அடைவாகப் புளிமிஞ்சில் புளித்துப்போகும்
ஈமேதான் உப்புவது மிஞ்சிற்றூனல்
நாடியே நாவுக்குக் கைப்புமாகும்
வாமேதான் காரமிஞ்சில் காரமாகும்
வடிவாக நாவுக்கு ருசியிராது
பூமேதா லிப்படிக்குச் சரக்கைப்பார்த்தால்
பூலோக மெல்லாமும் வாதமாமே. (37)

வாதந்தான் வருகவென்றுற் சொல்லக்கேளு
வகையாக வங்கத்தைச் சுண்ணம்பண்ணு
நீதமாம் வாதம்வரு முடனேதானே
நிலையாகும் புடமிறங்கும் நேர்மைபாரு
காதமாம் நடந்தாலோ வழிகள் தோணும்
கடத்தேற வேணுமென்றுற் கருவாய்ப்பாரு
வேதத்திற் சொன்னதிந்த மார்க்கந்தன்னை
விருபட யாகோபு சொன்னவாறே. (38)

## வங்கச் செந்தூரம்.

சொன்னதோ நின்னுமொரு வங்கங்கேளு
சுளுவாகு மிதுலெகுவு முன்னேபாரு
கன்னலமாய் வங்கமது பலமும்பத்து
நாடியே அலச்சட்டி தன்னிலிட்டு
கன்னல்போ லாவாரை பஞ்சாங்கந்தான்
கருத்தறவே பொடியாக்கி முகத்திற்றூவு
இன்னிலத்தில் குருக்கியே சிவக்கும்பாரு
இதமாகக் கல்வமிட்டுப் பின்புகேளே. (39)

பின்புதான் கற்றுழைப் பாலாலாட்டிப்
பிலக்கவே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
நன்மைபெறப் பெரியபுடம் போட்டெடுத்தால்
நலமாகச் சிவப்பாகும் நாடிக்கேளு
அன்பாகத் தாளகமும் பலமும்பத்து
அடைவாகப் புகைநீராற் சுருக்குத்தாக்கு
உன்பாகச் சாமமொன்று தாக்கிப்பாரு
உணமையாய்க் கட்டுமது உறுதிபாரே. (40)

உறுதியாய் வங்கத்தைக் கல்வமிட்டு
உத்தமே கற்றுழை நீரினுலே
அருதியா யரைசாம மானபின்பு
அடைவாகத் தாளகத்தின் மேலேகட்டி
கருதியாய்க் கதிரிலிட்டுக் காயப்போடு
நலமாகக் கல்லுப்புப் படிதான்சென்டு
வருதியாய் மேனியென்ற சாற்றுலாட்டி
வகையாகப் புடம்போடக் கட்டுத்தானே. (41)

கட்டியதோ ருப்பெடுத்து முன்னுள்ளமேலே
கனிவாகக்கட்டியே காயவைத்து
கட்டுமே உமிதனிலே கடுவேவைத்து
நலமாகப் புடம்போட்டு எடுத்துக்கொள்ளு
பட்டுமே குருவாகும் குருவிருட்டு
பதியலே நபிமார்கள் காணபாரப்பா
தட்டுமே குருவெடுத்து வைத்துக்கேளு
தரணிதனில் காகதண்டி தன்னேவரும்கே. (42)

## குடவன் செம்பு.

வாங்கியே ஒருசேரு கொருக்கிரீயும்
வளமாகத் தணிதனில் பிருக்கிக்கட்டி
தாங்கியே புடம்போட்டுப் பிரித்துப்பாரு
தப்பயேற் சரிபாகும் பதத்தில்வாங்கி
தேங்கியே திரியாதே பிங்கானிலிட்டுத்
திடமாகப் புகைரை அதிலேஊத்த
பாங்கியே பொங்கியது புகையும்பாரு
பாதைக்கு வெகுபோக்கு பாருள்ளோர்க்கே. (43)

பாரிலே வெங்காரக் கொஞ்சம்சேர்த்து
பதியவே குகையிலிட்டு உருக்குசெம்பு
ஊரிலே வருகாது யிந்தச்செம்பு
உறுதிபெறக் களங்குவந்த யிடங்களெல்லாம்
சாரியமாய்ச் சேர்த்துநீ சொல்லக்கேளு
கணக்காக நாகத்தின் செம்புரெண்டு
வாரியே முன்வங்கக் குருவும்ரெண்டு
வடிவாகச் சேர்த்துருக்கு வெட்டையாமே. (44)

வெட்டையா மதியெட்டில் ரெண்டுசேரு
விதமாக வங்கமொன்று சேர்த்துருக்கி
கிட்டவே ஊதிப்பார் மாத்துயெட்டு
இளரவே காலாகும் புடமிறங்கும்
தட்டையா யிவ்வேதை நிசமுமாகும்
சரியான மார்க்கமிது சார்புமெத்த
சிட்டரே யிதைவித்துச் செலவுசெய்து
சித்திபெற்று மேயிருந்து வாழலாமே. (45)

வாழவே செந்தூரம் பண்ணக்கேளு
வடிவான பித்தளையின் செம்புதன்னில்
தாழவே யிடைக்கிடைதான் தாக்கிநீரு
தடைபெறவே யெடுத்துப்பார் வெட்டையாகும்
ஏழைமதி போகாமல் தங்கத்தோடே
இடைக்கிடைதா னுருக்கியே தாக்கித்தீரு
பாழையாம் புகை நீரை விட்டகைத்துப்
பதிவாகப் பிங்கானிலிட்டுக்கேளே. (46)

இட்டுநீ வருத்துமே காசிமேரு
இதமாக அடைத்துமே சீலைசெய்து
பட்டுமே மூடியதை யடுப்பிலேற்றிப்
பக்குவமாய்ப் பனிரெண்டு சாமந்தீதான்
கட்டுமே யெரியிட்டுக் கல்வமிட்டு
நலமாக முன்புகைநீர் தன்னுலாட்டி
வட்டுமே காசியென்று மேருக்கிட்டு
வகையாக முன்போலே பெரித்திடாமே. (47)

எரித்துமே அடுப்பேற்றி யிறக்கிப்பின்பு
இதமாக யிப்படிக்குத் தாமுமஞ்சு
வருத்துமே வெரித்துயெடு மூருக்கம்பூப்போல்
வடிவாக யிருந்திடுமே செந்தூரத்தை
நரித்துமே நவலோகந் தன்னிலூட்ட
நலமாகத் தனித்தனியே வேதையாகும்
பிரித்துமே மாத்தென்ன பதிஞ்ஞூகும்
பெருமையாய்ப் பணவிடைதா னுண்டுதேறே. (48)

உண்டிடவே செந்தூரம் பணமவ்வீதம்
உறுதிபெற அந்திசந்தி தேகந்தானும்
கண்டிடவே கோயெல்லாந் தவிடுபொடியாகும்
கண்காணத் தேகமது கற்றாழைகும்
பண்டிடவே பழங்கதைகள் பேசாமற்றான்
பதிவான வங்கச் செந்தூரம்பாரு
தின்றிடவே புளியோடு நல்லெண்ணெய்விட்டுத்
திடமாக வுண்டுபார் சித்தியாமே. (49)

சித்தியாம் நபிமார்க ளாடுமாட்டைச்
செகத்திலே உறுதியுள்ள வாதிக்குத்தான்
நத்தியே சொல்லிவிட்டே னுனுங்கண்டு
நலமாகப் பாகமதைப் பார்த்துத்தேறி
சத்தியமா யுங்களுக்குச் சொன்னநீதி
தாட்டிகவான் கண்டுமே பிடிப்பானப்பா
புத்தியாய்க் கண்டுநீ பிடிந்துக்கொள்ள
பேர்பெரிய குருவாகும் பேணிப்பாரே. (50)

பேணியே உலகத்தில் வாதிதானும்
பிரபலமாய் வாதத்தைக் கண்டேனென்றும்
ஊணியே சொல்லியுமே பணத்தையாங்கி
யுத்தியொடு சரக்கதனை வாங்கிவந்து
கோணியே செய்திட்டுக் களங்குதன்னைக்
கூக்குரலாய்ச் செய்துமே செம்பிலிட்டு
காணியே ஒன்றுமில்லை கெட்டுப்போச்சு
நலமாகத் திரிந்தலைந்து மாளுவானே. (51)

மாஞுவான் சிறிதுபேர் வாதிதானும்
வகையில்லாப் படிப்பதுதான் தெரியாதாலே
கூளுமே குடித்திட்டுப் பொய்கள்சொல்லிக்
குணமில்லா அபீன்கஞ்சா கள்ளுதன்னை
பளுக்கவே குடித்துமே வாதஞ்செய்வோன்
பசப்பியே பணந்தன்னைப் பிடிங்கிக்கொண்டு
வாளுமே யென்றுசொல்லி யோடிப்போவான்
வகையறியான் மாடுதான் மேய்ப்பான்பாரே. (52)

மாடுதான் மேய்க்கின்ற வாதிதானும்
வகையில்லாக் கிடாமாடு வரிசைகாளூர்
காடுமே திரிந்தலைந்து மூலிதேடிக்
கருதியே யிலையைத்தான் பிடுங்கிவந்து
சாடுமே பாஷாணந் தன்னிலிட்டுச்
சரியாச்சு யென்றுமே லோகந்தன்னில்
பாபெட்டிக் கொடுத்துமே ஜன்றுமில்லை
பத்தியாய்ச் சொல்வார்கள் பாரிலோர்க்கே. (53)

பாரிலே வாதமில்லை யென்றுசொன்ன
பதிவான மூடருடன் சேர்க்கையாகா
ஊரிலே அவர்க்குகல்ல கெதியுமில்லை
உழன்றுமே ஏழ்ஜாகில் வீழ்வாரப்பா
சாரியாய் நீயுமே அவர்களோடே
சரியாகப் பேசாதே தரணியோர்க்கு
காரியமாய்ச் சொல்லிவிட்டேன் கண்டுகொள்ள
கணக்கறிந்த யாகோபு சொன்னவாறே. (54)

சொன்னதொரு வங்கத்தின் சுண்ணந்தன்னைச்
சொல்லிவிட்டே னதன்பெருமை தலக்கமாக
தன்னபமாய் வங்கத்தின் சுண்ணந்தன்னை
நலமாகக் கண்டாக்கால் காட்டிலோர்க்கு
பின்னமில் லாமலே தங்கமாகும்
பிசகாது பென்வசனம் பொய்போகாது
தன்னகரில் சித்தனாய் வாழலாகும்
தடையற்ற சமிமார்களாடுமரட்டே. (55)

ஆட்டான கேள்வியினல் வாதஞ்சுட்டு
அறியாமற் பொய்யென்று லாரென்செய்வார்
நீட்டான குருவே ணுஞ் சிஷன்வேணும்
நிலையான சுண்ணமென்ற கண்டம்வேணும்
பாட்டான படிப்பைத்தா னறியவேணும்
பகலிரவாய் சரக்குவகை காணவேணும
மூட்டான உலகத்தில் திரியவேணும்
முற்றுணர்ந்து பார்த்தாக்கால் சித்தியாமே, (56)

## சினச் சுண்ணம்.

சித்தியா மின்னமொரு சுண்ணமார்க்கம்
செப்புகிறேன் அண்டாண்டந் தளைத்து ஆட
மூத்தியாய்ச் சீனமது பலமும்பத்து
முடிவான கரிநெருப்பி லூதிநீயும்
சத்தியமா யெடுத்தமே சொல்லக்கேளு
சரியாக இடைகோராய்த் தூத்தன்னீரை
நத்தியே சேர்த்துமெள்ளக் கல்வமிட்டுக்
கலமாக அரைக்கவே சொல்லக்கேளே. (57)

சொல்லக்கேள் யெருக்கம்பால் படியுமொன்றில்
சுயமாக அண்டவெண் கருவுமிட்டு
நல்லவே மூன்றுநாள் வைத்துப்பாரு
கலமான தண்ணீர்போல் தெளிந்துநிற்கும்
வல்லமையா யிந்தநீர் தன்னைவிட்டு
வளமாக அரைச்சாமம் வில்லைதட்டி
செல்லவே கதிரிலிட்டுக் காயப்போடு
சிறப்பாக ஊதிடவே சுண்ணமாமே. (58)

சுண்ணமாம் கடுஞ்சுண்ணம் தூத்தச்சுண்ணம்
சுயம்பாகச் சரக்கெல்லாம் கரியிலாடும்
நன்னயமா யிச்சுண்ணம் நபிமார்க்கொப்பும்
கலமாகச் சகலமுந்தான் சுண்ணமாகும்
முன்னமே சுண்ணத்தில் வீரம்பாதி
முடிவாகச் சேர்த்தசைத்து முன்னீராலே
கன்னல்போற் கசடருந்தா ளகத்திலப்பிக்
கனிவாகக் காயவைத்துச் சொல்லக்கேளே. (59)

## தாளகச் சுண்ணம்.

சொல்லவே குக்குடத்தில் நீருமாகும்
சொல்லரிய தாளகத்தின் சுண்ணப்போக்கை
நல்லவே ஒருவருக்குஞ் சொல்லப்போகா
நலமான பாகமிது காட்டிலோர்க்கு
வல்லமையாய்த் தாளகத்தின் சுண்ணம்கேளே
வடிவான நீரைவிட்டு அரைத்து நீயும்
செல்லவே தருசின்மேல் பிப்பிப்போடு
செயமான கதிரில்வைத்துச் செப்பக்கேளே. (60)

## தூரிசுச் சுண்ணம்.

செப்பவே கோழியென்ற புடத்தைப்போட்டுச்
செயமாகப் பிரித்துப்பார் தூருசச்சுண்ணம்
கப்பவே யிருந்துவிடும் பெடுத்துநீயும்
நலமாச முப்பொழுதுந் தொழுது நன்றாய்
தப்பியே போகாமற் சொல்லக்கேளு
தடையற்ற வீரமது தானுமிட்டு
அப்பியே யரைத்துவிடு சாமம்நாலு
அடைவாக முன்னீரால் அரைத்திடாயே, (61)

அரைத்துமே தருசின்மேற் கவசங்கட்டி
அடைவாகக் கதிரில்வைத்துப் புடமுமிட்டு
பரைத்துமே பெடுத்துப்பார் ரத்தம்போலாம்
பத்தியாய்த் தருசியது தொந்தமாச்சு
கரைத்துமே யித்தருசு காலனெக்கும்
கணக்காகச் சகலமுந்தான் சுண்ணமாகும்
விரைத்துமே யிச்சுண்ணம் விருலிக்கிட்டு
விதமாகப் பிழிந்திடவே நீறுமாமே. (62)

நீருன சாறுவராத் தழைகளெல்லாம்
நிலத்துமே நீருகும் வேதைகோடி
ஆருகுந் தங்கமது கோடாகோடி
அனேத்துமே சரக்கையெல்லாம் கரியிலாடும்
வேருகும் வாதமென்ற சொல்லுக்கெல்லாம்
விதமாக ராஜாவாம் தருசச்சுண்ணம்
பாருகும் படிமுன்னே வேதையாகுஞ்
பாகைக்குக் [illegible] (63)

சேர்த்தியாஞ் சூதமது பலமும்பத்து
சேர்மையா யயக்கரண்டி தன்னிலிட்டு
சாத்தியே சுண்ணத்தி னுல்முறித்த
சரியான நீரைவிட்டுக் கொதிக்கவைத்தால்
பாத்தியே சூதமது கட்டிப்போகும்
பதிவான பிருபத்தோர் மணிகள்செய்து
வாத்தியே தமிட்டு நூலில்கோர்த்து
வடிவாகக் கைதனிலே வைத்துக்கொள்ளே. (64)

வைத்தமே பிசமில்லா ரதமானென்று
வகையான கலிமாவை ஓதித்தீரு
மைத்தமே நாளொன்றுக் கொன்றுதானும்
நாடியே மூப்போதுந் தொழுதுபோற்று
பைத்தமே யிப்படிக்குத் தொழுதாயானால்
பதிவாக நிமார்போ லிருக்கலாகும்
கைத்தமே களங்கோடு செந்தூரங்கள்
கனிவான பொருளாகுங் கண்டுகொள்ளே. (65)

கண்டுகொள்ளு நினைத்ததெல்லாங் கையிற்கூடும்
கதியாகும் விதியாகுஞ் சித்தியாகும்
பண்டுமுன்னே யிருந்ததெல்லாம் பாகமாகும்
பத்தியதோர் காலனும் பாரிலோர்க்கு
தொண்டுபடுஞ் சகலமுந்தான் சித்தியாகும்
தொல்லுலகில் விந்திறுசும் தொன்மைபாரு
உண்டுமேல் திரீகளுந்தான் வசியமாகும்
உற்றுணர்ந்து பார்த்தாக்கால் சித்தியாமே. (66)

சித்தியாம் சூதத்தைக் கரியில்வைத்துச்
சிட்டரே யுருக்கிப்பார் கரியிலாடும்
பத்தியாய் நாலுக்கு ஒன்றுதானும்
பதிவான தங்கமொன்று நாகமொன்று
தத்தியா யுருக்கிப்பார் கரும்குமாகும்
நலமாகும் அதையுடைத்து நவிலோகத்தில்
வெத்திபெற நூற்றுக்கு ஒன்றுமீய
விதமாகப் பத்தரையாம் விரும்பிப்பாரே. (67)

விரும்பியே செந்தூரம் பண்ணக்கேளு
வித்தகமாஞ் சூதமென்ற களங்கந்தள்ளி
அரும்பியே கல்வமிட்டு உடைத்துநீயும்
அடைவாகக் கெந்தமிட்டுத் தாரமிட்டு
வரும்பியே புகைநீரா லரைத்துச்கொண்டு
வாகாக உமிகெருப்பில் வருத்துநீயும்
தரும்பியே காசியென்ற மேருக்கேற்றித்
தப்பாம லெரியிடவே தன்மையாமே. (68)

தன்மையாய்ப் பன்னிரண்டு சாமந்தானும்
தாக்கிடவே யெரித்துநீ கமலமாக
உண்மைகா டாக்கினியா யெரித்துநீயும்
உற்றுமே நபிமாரைத் தொழுதுபோற்றி
வண்மையாய் அல்லாவை மனதிலெண்ணி
வடிவாக யெல்லாமுஞ் சித்திபாக
தண்மைபெறச் சொல்லிய நவலோகத்திற்
தூக்கிமெள்ள நூற்றுக்கு ஒன்றுதாக்கே. (69)

ஒன்றுமே கொடுத்துநீ உருக்கிப்பாரு
உற்றவெடு பத்தரைதா ணிக்கொக்கும்
கன்றுமே போட்டதுபோற் சித்தியாகும்
கனிவான பொருளாகுங் கணக்குக்கேளு
நன்றுமே நாவினாற் சொல்லப்போகா
நானிலத்தில் நபிமார்க ளாடிமாட்டு
அன்றுமே பணவிடைதான் பாலிலுண்ணு
அருணனிற மாகுமிது அடைவுமாமே. (70)

ஆடவான மண்டலந்தா னுண்டுதேரு
அதிகபெல னுதவுமே தேகந்தானும்
மூடவான தாதுவெல்லாம் நிமிர்ந்துபோகும்
முத்தியது வண்டாகும் மோகமாகும்
நடவாகு முப்போடு எண்ணெயவிட்டு
நாடியே பத்திபமா யுண்டுதேரு
குடமாகும் பணமதுவும் அதிகமாகும்
குடிலமரும் போகமாம் குணமுமாமே. (71)

குணமான வாதத்தில் குற்றத்தானும்
கொடியதொரு வேகமாம் குற்றமில்லை
மணமாகும் வேதையாம் பொன்னுமுண்டு
மயங்காதே தருசதுவை நீற்றிலுக்கால்
உணவாகுஞ் சகலமுந்தான் சித்தியாகும்
ஓகோகோ உறுதியுள்ள செந்தூரந்தான்
பணமாகும் பாதைக்கும் பெலச்சும்பாரு
பத்தியுள்ள கபிமார்களாடுமாட்டே. (72)

மூட்டான கபிமார்க ளாடுமாட்டை
அறிவுள்ளோ ரறிவார்கள் மூடர்தானும்
பாட்டான படிப்புகளைப் படித்தக்கொண்டு
பதிவாக உள்ளன்பில் வேறேயொன்று
நீட்டாகச் சொல்லுவார் வாதங்காணார்
நிலைபான கைபாக வரிசையில்லார்
மூட்டாகச் சொல்லுவார்க் கொன்றுமில்லை
புகலரிய கால்வேதம் பிரித்துப்பாரே. (73)

பிரித்துமே ஓவ்வொன்றுப்ச் சரக்கைக்கண்டு
போக்கோடே செய்தாக்கால் பலனுமாகும்
கிரித்துமே நூல்கண்டு வினயங்கண்டு
விதமாகச் செய்திடவே சித்தியாகும்
பரித்தளவி லளைக்குள்ளே யிருந்தாப்போல
பதிவாகச் சொன்னதினற் பலனுமில்லை
கிரித்தாக்கால் ஒன்றுமில்லை சீருமில்லை
செப்பமா யாராய்ந்தால் செயமுமாமே. (74)

செயமாகுந் தருசினுட சுண்ணமல்லால்
செப்பமாய் வாதங்கள் மிகவுமில்லை
கயமாக வங்கமில்லாச் செந்தூரமெல்லாம்
கூடியே தூரயெரி நன்மையாகா
பயமாகக் கைபாக மில்லாவேலை
பதிவே தூரயெரி பாரிலோர்க்கு
மயமாக நூலில்லா வாதமெல்லாம்
வகையில்லை தொகையில்லை வழக்கமாமே. (75)

## நாகச் செந்தூரம்.

வழக்காகத் தங்கமில்லா வாதமெல்லாம்
வடிவாகத் தூரயெரி வகையுமில்லை
தழக்காக மதியில்லாத் தங்கமெல்லாம்
தடையறவே வாசல்தனில் தூரத்தள்ளு
உழக்கமாய் மாடில்லாக் கலப்பையெல்லாம்
உறுதியில்லை வுழுகாது உண்மைபாரு
தழக்கமா யறமில்லா வேதையெல்லாம்
தப்புரவாய்த் தள்ளிவிடு துயர்ந்துபாரே. (76)

துயர்ந்துபா ரின்னுமொரு நாகந்தன்னைத்
தப்புரவாய்ச் செந்தூரஞ் செய்யக்கேளு
நைந்துமே நாகத்தி லுட்டம்போல
நாட்டிலே கிடையாது நாடிப்பாரு
பைந்துபார் நவலோகம் பழுக்குமப்பா
பதிவான நாகமென்ற ராசாதானும்
வைந்துமே புகையெல்லாம் வேதையாகும்
வடிவான நாகந்தா னுடமாட்டே. (77)

ஆட்டான நாகமது பலமுமொன்று
அடைவான யிலுப்பயெண்ணெய் தன்னிலேதான்
வாட்டமா யேழுதா முருக்கிச்சாய்க்க
வகையான கசடகலும் வண்மைபாரு
தேட்டாக நாகத்தை உருக்கியெட்டு
திடமான சூதமது சென்டுவிட்டு
பாட்டாகக் கல்வமிட்டு உடைத்து நீயும்
பதிவாகக் கற்றுழைப்பாலாலாட்டே. (78)

ஆட்டியே வில்லைதட்டிக் கதிரில்வைத்து
அடைவாகக் காய்ந்தபின்பு சொல்லக்கேளு
பூட்டியே குக்குடமாம் புடமுமிட்டுப்
போக்கோடே யெடுத்தமெள்ளச் சொல்லக்கேளு
காட்டியே கசடறும் தாளகத்தில்
கலமாகக் கட்டியே கதிரில்வைத்து
கூட்டியே சேவலென்ற புடத்தைப்போடு
குணமாக வெடுத்துமே சொல்லக்கேளே. (79)

சொல்லவே கல்வமிட்டுப் புகைநீராட்டிச்
சுயமாகத் தாளகத்தின் மேலேகட்டி
கல்லவே கதிரில்வைத்துக் காயப்போடு
நலமாக பயபக்தியுடனேதானும்
வல்லமையா யிப்படிநால் தாமும்போட்டு
வகையாக பெடித்துப்பார் களங்குமாகும்
வெல்லவே ரூபிமாரைத் தொழுதுபோற்றி
விதமாகச் சொல்லுகிறேன் விரும்பிக்கேளே. (80)

விரும்பியே செம்புதனில் பெட்டிலொன்று
விதமாகக் கொடித்தருக்கு அதைஉடைத்து
கரும்பியே வெள்ளிபெட்டில் ரெண்டுபிட்டு
நலமாகத் தங்கமது ஒன்றுசேர்த்து
தரும்பியே ஊதிபெடி தங்கமாகும்
தாக்கான தங்கத்தை வித்துநீயும்
வரும்பியே உண்டுடுத்திக் கத்திரிக்கு
வகையாகக் கொடித்துமே தொழுதிடாவே. (81)

தொழுதுமே நாகத்தி னுட்டைப்போலே
தொல்லுலகிற்கிடையாது துயர்த்துபாரு
அழுதுபார் வாதந்தான் வந்தபோது
அடைவாக ஒருவருக்குஞ் சொல்லவேண்டாம்
உழுதுமே பயிரதுவை யிட்டுப்பின்பு
உண்மையா யறுப்புகள்தா னறுத்துநீயும்
பழுத்துமே உண்டபின்பு வாதமார்க்கம்
பதையாமற் செய்திடவே பலனுமாமே. (82)

பலனுகச் சொல்லுகிறே னுற்றுக்கேளு
பாதையிது லெகுவாகும் பலிதமாகும்
பெலனுகக் கெந்தகமும் தருசுசேர்த்து
பிரியாமற் சத்தாகி யிருந்ததென்றால்
அலனுகச் சத்தைத்தான் கல்வத்திட்டு
ஆடைவான காரியம் குமரிநீரால்
வலுவாக அரைத்துமே புடமூன்றிட்டு
வண்மையா பெடுத்திடவே மஞ்சளாமே. (83)

மஞ்சளாம் வங்கமது சத்துக்குத்தான்
மார்க்கமாய் நாலிலொன்று சேர்த்தரைத்து
தஞ்சமாய்ப் புடம்போட்டு உருக்கிப்பாரு
தடையறவே கரிபோலே யுருகிநிற்கும்
பஞ்சமது தீர்ந்துவிடும் வாதிக்குத்தான்
பதிவாகப் பஞ்சமித்திரச் தன்னிற்சாய்த்து
தஞ்சமர மெடுத்துமே வைத்துக்கொண்டு
தொடுசரவேபாகமாய்ச் சொல்லக்கேளே. (84)

சொல்லுவேன் சத்திலுள்ள செம்புதன்னைத்
துடியான பூமதுபி டித்திழுத்து
மல்லாகயிருக்கிடுமே பின்புநீயும்
மார்க்கமாய் வங்கவெட்டை போலேயாகும்
கல்லவே வெள்ளிதனில் நாலிரண்டு
கணக்காகச் சேர்த்துமே தங்கமொன்று
கல்லாகச்சேர்த்தூத மாதமேழு
நானறிந்தேன் யாகோபுநலஞ் சொன்னேனே. (85)

சொன்னதொரு வங்கத்தைச் செந்தூரிக்கச்
சொற்பெரிய வங்கவெட்டை பலமும்நாலு
கன்னல்போல்த் தங்கமது பலமுமொன்று
காரியமாய் நாகமது பலமுமொன்று
நன்னயமா யுருக்கியெடு புட்டுப்போலே
நலமாக யிருக்குமது கல்வத்திட்டு
இந்நிலத்திற் கெந்தகமுஞ் சூதஞ்சேர்த்து
இதமாகப் புகைநீரா லரைத்திடாயே. (86)

அரைத்துமே வில்லைதட்டிக் கதிரில்வைத்து
அடைவாகப் புடமிட்டு எடுத்துப்பாரு
தரைத்துமே கரிபோலே தூளாம்பாரு
தனியெடுத்துப் பலம்நாலு கல்வத்திட்டு
பரைத்துமே வங்கச்செந் தூரமொன்று
பதியவே கல்வத்தி லிட்டுநீயும்
வரைத்துமே குமரியன்னந் தன்னலாட்டி
வகையாக வில்லைதட்டிக் கதிரில்வையே. (87)

கதிர் தன்னிற் காயவைத்துப் புடமுமிட்டுக்
கனிவாக வெடுத்துப்பார் செந்தூரமாகும்
பதிவாக நபிமாரைத் தொழுதுபோற்றிப்
பன்பான செந்தூரம் நவலோகத்தில்
கெதியாக ஒன்று கொடி மாத்துப்பத்து
கிருபையா யிருந்திடுங்காண் கல்லவித்தை
சதியாகச் செய்யாதே பாகமாகச்
சாஸ்திரத்தை யாராய்ந்தால் தன்மையாமே. (88)

தன்மையாய்ச் சாஸ்திரமுஞ் சூஸ்திரமும்பாரு
தடையறவே நபிமாரைத் தொழுதுபோற்று
உண்மையரு ளறிவாகக் கண்டுதொண்டு
ஒருவேளை செய்தமே சீவனங்கள்
வண்மையதாய்ச் செய்தமே உண்டுதேரு
வகையறிய வேணுமென்று லின்னூல்தன்னை
கண்மையாய்ப் பார்த்துவிடு சகலசித்தும்
கண்டுநீ பிடிக்கலாகுங் கருவுலாவே. (89)

கருவுலாவே தளகர்த்தன் வங்காரசன்
கனகமது தந்திடுவான் கண்டுகொள்ளு
பருகவே வங்கமில்லாக் களங்கமெல்லாம்
பதிவாக ஒன்றுக்கு மாகாதுதள்ளு
கருகவே தங்கமில்லாச் செந்தூரத்தான்
கலமில்லை முறைகடக்கத் தள்ளிப்போடு
உருகவே சத்துத்தா னில்லாவிட்டால்
உறுதியில்லை செம்புதான் களிம்பறுதே. (90)

களிம்பான செம்பைத்தான் மட்டஞ்சேர்த்தால்
கதிபெருகப் புடமிறங்காக் கனகமில்லை
வளிம்பான பொன்னில்லை சேதம்பொம்ப
வடிவான வருத்தங்கள் பிகவுமுண்டு
உளிம்பாகப் பச்சைமண் சுட்டால்வன்று
உறுதிபோக்கும் செம்புதானுறுதியாகும்
அளிம்பாகச் சொல்லாமல் நூலைத்தானும்
அறிந்துமே உழைத்தாக்கா லாபமாமே. (91)

## தாகச்செம்பு

லாபமா மின்னமொரு நாகச்செம்பை
கலமாகச் சொல்லுகிறும் காட்டுள்ளோர்க்கு
காபமாய்த் திரியாதே நாகந்தானும்
கனமாகப் பலம்நாலு தாக்கிநீயும்
தாபமா யிலுப்பயெண்ணெய் தனிலுருக்கித்
தாட்டிகமா யிருபத்து ஒன்றுதானும்
ஆபலாய்ச்சாய்த்துமே உருக்கிநீயும்
அடைவாகச் சூதகத்தைப் பாதிசேரே. (92)

பாதிதா னுருக்குமுகந் தனிலேவூட்டு
பதிவாகக் கல்வமிட்டு உடைத்துக்கொண்டு
சாதிபார் வீரமது பலமுங்கால்தான்
சரியாகச்சேர்த்துமே கல்வத்திட்டு
போதியாய்ப் புகைநீரி லரைத்துநீயும்
போக்கோடே யிருசாமம் வில்லைகட்டி
நாதியாய்க் கதிரில்வைத்துச் சீலைசெய்து
கலமாகக் குக்குடத்திற் போட்டுவாங்கே. (93)

வாங்கியே பார்த்தாக்காற் சிவந்திருக்கும்
வளமாகத் தாளகமும் பலமும்பத்து
தேங்கியே கற்சுண்ணஞ் சேர்த்தேயிட்டுத்
திடமாகப் பாணிவிட்டு நீத்திநீயும்
பாங்கியே சடகற்றி எடுத்து மெள்ளப்
பதிவாகப் பலம்நாலு கல்வத்திட்டு
நீங்கியே நாகமஞ்சள் பலமும்நாலு
நேராக யிதுரெண்டுங் கல்வத்திட்டே. (94)

இட்டுமே புகைநீராற் சாமமாட்டி
இதமாக உண்டைபண்ணிக் கதிரில்வைத்து
காட்டுமே காரீயம் பலமும்நாலு
கலமாகக் காண்டியிட்டு உருக்கிநீயும்
பட்டுமே வெடியுப்புப்பாதியிட்டுப்
பதிவாகக் கிண்டிடவே மஞ்சளாகும்
கட்டுமே மஞ்சளது பலமும்நாலு
காரியமாய்க் கல்வமிட்டுக் கணக்குக்கேளே. (95)

கணக்காகக் கற்றுளத் பாலிலாட்டிக்
கதிபெருக மூன்றுபுடமிட்டுநீயும்
பிணக்காகக் கன்னிப்பால் தனிலாட்டிம்
பிரியமாய் மூன்றுதடை தனிலேகட்டி
துணக்கமாய்க் கதிரில்வைத்துப் புடமுமிட்டுத்
தூக்கியெடு கபிமாரைத் தொழுதுபோற்றி
குணக்கில்லாக் குருவாகும் செம்புதனில்
கொடுத்திருக்க ஒன்றுகும் கூர்ந்துபாரே. (96)

கூர்ந்துபார் செம்பதுவுந் தங்கமாகும்
கூகூவாதமது கொள்ளோயாகும்
தேர்ந்துபா ருப்புக்குங் காவிக்கப்பா
திடமாக நின்றிடுங்கான் செல்மாகும்
வார்ந்துமே தரியாதே புத்திகேளு
வகையாக வைத்துநீ செலவுசெய்து
பார்த்துமே கந்திரிகள் மிகவும்பண்ணு
பதிவாக நின்றிடவே பலனுமாமே. (97)

## துருசுச் செம்பு.

பலமாகச் சொல்லுகிறேன் துருசுச்செம்பு
பத்தியா யெடுத்திடவே பலமதாக
நலமாகத் துருசதுவும் பலமும்நாலு
நாடியே கட்டியா யெடுத்துக்கொண்டு
பிலமாக முடிவதுவும் பலமுமெட்டு
பிசகாமல் தரிசியின்மேற் சுத்திநீயும்
கலனுக்கெ ந்தியது பலமுமுக்கால்
கனிந்துமே சூடனரை வீரங்காலாம். (98)

காலாக பிதுவெல்லாங் கல்வத்திட்டுக்
கதிபெறவே கற்றுழை நீரிலாட்டி
சாலாக அதின்பேரி லாரொடியைத்தானும்
சாதகமா யரைத்துமெள்ளப் பழச்சாற்றுலே
ஏலாக அரைத்துமே கவசங்கட்டி
இதமாக மண்கவசம் மேலேகட்டி
பாலாகக் கதிரில்வைத்துக் காயப்போட்டுப்
பதிவாகப் பெரியபுடம் போட்டிடாயே. (99)

போட்டுமே மேற்கவசந் தள்ளிப்போட்டு
போக்கோடே மருந்தெல்லா மெடுத்துக்கொள்
காட்டுமே வைத்துநீ மதியிலெட்டுக்
கனிவாக ரெண்டுகொடுத் தருக்கிப்பாரு
நீட்டுமே தங்கமது ஒன்றுசேர்த்து
நிறமாக ஊதியெடு மாத்துயெட்டு
நாட்டுமே வித்திடுநீ செலவு செய்து
நலமாக உண்டிட்டுப் பின்புகேளே. (100)

கேளுமே யிதுலெகுவு முன்னேசெய்து
கிருபைவைத்துப் பின்புதான் வங்கந்தன்னை
காளுமே உழைத்துச்சென் தூரம்செய்து
நலமாக ரவிதனிலே யிடையேதாக்கு
பாளுமே போகாது புடமிறங்கும்
பத்திலொடு வித்துமே செலவுசெய்து
தாளுமே கபிமாரை வணங்கச்சொன்னேன்
சுருதியுற்ற யாகோப் சொன்னவாறே. (101)

வாரேது வென்றுக்கால் சொல்லக்கேளு
வரிசையாய்க் கைபாக வரிசைதன்னை
பாரேது பார்த்துநீ பாகமாகப்
பத்திலே செய்தாக்கால் பலனுமாகும்
தூரேதுஞ் சொல்லாதே துணியாய்ப்பத்தித்
திடியாக ரசவாதத் தொழிலைக்கண்டு
கூரேது கூக்குரலாய்ச் செய்யவேண்டாம்
குடிகேடு வந்துவிடும் குணமுமாமே. (102)

குணமாகப் பலபேர்க ளிடத்தில்வாதம்
கூச்குரலாயச் சொன்னக்காற் குடிகெடுக்கும்
பணம்போகு மாக்கினைதான் மிகவுண்டாகும்
பதிவான தலைபோகும் பாரிலேதான்
உணவாக உனைநம்பார் உலுத்தமாடு
உற்றுமே பொருளறியார் ஒழுங்குமில்லை
பிணம்போலே யிருந்துமே வேலைபாரு
புத்தகனில் லவத்திருக்கும் பிரிதிகாரி (103)

பிரியமாய் நாவடக்கிப் பேசுநீயும்
போக்கோடே கையடக்கம் பொறுமைசாந்தம்
அரியபாய் அடங்காம லிருந்தால்நீயும்
ஆண்மைவந்தால் கலிபோகு மறிவுளோர்க்கு
கருதியே கருவுதனை யறியச்சொன்னேன்
கணக்காகச் சுண்ணம்நூற் றைம்பத்தைந்தும்
வருதியாய்ப் பார்த்தமே வணக்கம்பண்ணி
வழகமாய்ச் செய்திடவே வடிவுமாமே. (104)

வடிவாகப் பஞ்சபூ தத்தைக்கண்டு
வலுமையாய்க் கைபாக வடிவுகண்டு
அடியான பொருள்கண்டு பேச்சுங்கண்டு
தொல்லுலகில் சாக்குகளைச் சோதித்தேறு
மூடதாகச் சகலமுந்தான் சித்தியாகும்
மூனேகண்டு உறுதிபெற்ற மூலங்கண்டு
இடிவான சொல்லைத்தான் பிரிதறுப்பார்த்து
இதமாகச் செய்தவனே சித்தனுமே. (105)

## தாளகக்கட்டு.

சித்தான தாளகத்தின் கட்டுக்கேளு
சீர்பெறவே பலம்பத்து நிறுத்துக்தொண்டு
முத்தான சுண்ணும்பு சட்டியிட்டு
மூவுலகு மெய்திடவே பாணிவிட்டு
நத்தான நெரியிட்டுக் கசடுகற்றி
நலமாக எடுத்துவைத்து நாட்டக்கேளு
பத்தான அப்ரேகம் பலமும்பத்து
பதிவான வீரமது பலமுங்காலே. (106)

காலாக நிருத்துமே கல்வத்திட்டுக்
கருதியே பாணிவிட்டு அரைகால்சாமம்
வேலாக வெண்ணெய்போற் றிரளும்பாரு
விதமாக வளித்துவில்லை கதிரில்வைத்து
சேலாகக் கடையென்ற புடமுமிட்டுச்
செறப்பாக வெடுத்துப்பார் வெள்ளையாகு
தாலாகக் கன்னியர்பால் விட்டரைத்துத்
தாளகத்தின் மேலங்கி கட்டிக்கொள்ளே. (107)

கட்டியே ஒன்றுக்கு நாலதாகக்
கனிவாக உருண்டையாய்க் கட்டிநீயும்
பட்டியே கதிரில்வைத்துக் கிளிஞ்சிச்சுண்ணம்
பத்தியெடி சட்டிதனிற் பாதியிட்டு
புட்டியே உண்டைதனை மேலேவைத்துப்
புகலரிது அதின்பேரிற் சுண்ணம்பிட்டு
கட்டியே அமுக்கியே அகப்பிலேற்றி
நலமாகச் சமலம்போ லெரித்திடாயே. (108)

எரித்தமே பிரித்தபெடி உண்டைதானும்
இதமாகக் கவசத்தைப் பிரித்துப்பாரு
வரித்தியே தாளகந்தா னுருகிநிற்கும்
வகையாகச் செவ்தநிற மாகக்காணும்
சரித்தியே காரீபம் பலமும்பத்து
கனிவாகக் கல்வத்தி லிட்டுநீயும்
சரித்தமே தகடதனைப் பிச்சுப்போட்டு
சாரித்துக் கற்றுழை நீரிலாட்டே. (109)

ஆட்டியே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
அடைவாகப் புடங்கொஞ்சம் போட்டெடுத்து
நீட்டியே யெடுத்தப்பார் மஞ்சளாகும்
நோன மஞ்சள்தனைக் கல்வத்திட்டு
தாட்டிகமாய் மூன்னீரா லரைத்துநீயும்
தப்பாமற் புடம்போட்டு முன்போற்றுனும்
கூட்டியே செவ்தநிற்கும் பின்புநீயும்
குழுவே புடம்போடக் குணமதாமே. (110)

குணமாக இப்படிக்குப் புடமூன்று
குடிகேடு செய்பாமற் போட்டுப்பாரு
மணமாகச் சென்தூரமாகும்பாரு
மயங்காமற் கல்வமிட்டுப் புகைரோட்டி
பணமாக முன்னெடுத்த தாரமேலே
பதியவிதைக் கட்டிநீ கணக்குக்கேளு
உணவாகத் தாரமொன்று வங்கமாலு
உற்றுமே கட்டிக்கிர் காயவைவே. (111)

காபலைத்துக் கிளிஞ்சியென்ற சுண்ணத்தாலும்
கனிவாகப் படிரெண்டு சட்டியிட்டு
மாயலைத்து அமுக்கியே பதின்மேற்கேளு
வகையாக வங்கவுண்டை அதின்மேலிட்டு
நாபன்மார் சொற்படிக்குக் கிளிஞ்சிச்சுண்ணம்
நன்றாக அமுக்கியே மூடிநீயும்
பாயவே அடுப்புதனி லேற்றிக்கேளு
பதிவாகக் காடாக்கினி யெரித்திடாயே. (112)

எரித்துயெடு கால்சாமம் பிரித்துமெள்ள
இதமாக உண்டையெல்லாங் கல்வமிட்டு
வரித்துயெடு புகைநீரால் சாமமாட்டி
வகையாகத் தாளகத்தின் மேலேகட்டு
நரித்துமே கதிரில்வைத்துச் சட்டிதன்னில்
நலமாக நீரிட்டு உண்டைவைத்து
பரித்துமே முன்போலே சுண்ணமிட்டுப்
பதியவெரி மூன்சாமம் பண்புதானே. (113)

தானேதா னிப்படிக்குத் தாமும்காலு
தடையறவே யெரித்துயெடு குருவுமாகும்
மானேதான் நபிமாரைத் தொழுதுபோற்றி
வையகத்தி லாண்டவரை மூன்றுகாலம்
பானேநீ தொழுதிட்டுச் செம்புருக்கிப்
பதிவாகக் குருவதனி யிடையேயீவி
கோனருளாற் செம்பதுவும் பொருந்திப்போகும்
குணமாகும் யாகோபு கூறினாரே. (114)

கூறினேன் வெள்ளிதா னுலருக்கிப்
குணமாக நேரேகால் கொடுத்துப்பாரு
வாரியே யெடுத்துப்பார் வெட்டையாகும்
வடிவாக்கத் தங்கமொன்று சேர்த்துருக்கி
நாரியே ஹதியெடு பொன்போலாகும்
நாதாக்கள் நபிமார்க ளாடுமாட்டு
பாரிலே சொல்லாதே தகடுதட்டுப்
பண்பாகப் புடமாகும் பலமும்காலே. (115)

பலம்மாலு உப்பதுவும் பலமுமூன்று
பத்தியாய் மத்தித்துத் தகடில்வைத்து
பிலமாகப் படம்போட ரெண்டிடைதானிற்கும்
பேசாதே யெடுத்துவித்துச் செலவுசெய்து
அலனுகக் கந்திரிகள் சோறுமாக்கி
அடைவாகக் கொடுத்துமே பின்புரீயும்
வலனுகப் பள்ளிதனில் தொழுதுபோற்று
வையகத்தில் யாகோபு வரிசைதானே. (116)

வரிசைதா னிவ்வேதை நிசமதாகும்
மயங்கிரீ திரியாதே அல்லாமேலே
தரிசையா யாணையாம் பாகந்தப்பில்
தூணையான நபிமார்மே லாணையாகும்
பரிசையா யிப்பாகந் தப்பிற்ரூனல்
பதிவான பெம்பேரி லாணையாகும்
உரிசைதரும் நாவினுற் சொன்னசொல்லு
உற்றுணர்ந்து யாகோபு சொன்னவாறே. (117)

சொன்னதொரு ஆணையிட்ட பொருளைக்கேளு
சொற்பெரிய முன்னுல்லான் ராமதேவர்
நன்னயமாய் மக்காவின் தேசம்புக்கி
நலமாக வேதத்தில் நுளைந்தபோது
கன்னல்போற் சித்தசெல்லாம் பரியாசந்தீர்ன்
கண்டுமே சொன்னுர்கள் காதலாலே
சின்னபின்ன மாகவேதான் வாதப்போக்கைச்
செப்பினுர் சித்தசெல்லா மதற்குத்தானே. (118)

தானேதான் வேதத்தின் மார்க்கத்தாலே
தடைபறவே கைபாகவரிசைகண்டு
ஊனேதான் சொல்லிவிட்டே னென்னேப்போலே
உற்றுணர்ந்த ஏழுபயாம் வாதிமார்கள்
கானேதான் பிழைக்கவே சொல்லிப்போட்டேன்
கருணைரச வாதத்தைக் கண்டோர் தெய்வம்
மானேதான் காணுத பேர்கள்தானும்
மதித்துமே யறியார்கள் மார்க்கமாமே. (119)

மார்க்கமாய் மடையருக்குச் சொல்லவேண்டாம்
மதிகெட்டுத் திரியாதே சுண்ணக்காண்டம்
ஏர்க்கவே அறுநூறும் பார்த்துப்பின்பு
இதமாயிம்முன்னூறு தன்னைப்பார்த்து
பார்க்குளிதைக் குறுக்கிநூற் றைம்பத்தைந்து
பதிவாகப் பார்த்திட்டுப் பலனேச்சோதி
கோர்க்கவே நிசமாகும் வாதந்தானும்
கொள்ளையோ கொள்ளையிதைக் கூறினேனே. (120)

## அரிப்புக்காரன் செய்கை.

கூறினேன் குணமாக அரிப்புக்காரன்
குணத்தையுந் தானறியக் குறிப்பைக்கேளு
தேறியே களவுசெய்யுந் தட்டானிட்ட
திடமாக ஊதுகின்ற நிகடைதன்னை
மாறியே மனம்பிடித்துச் சேர்க்குந்தானே
மயமாகக் காற்பணமுந் தாரேவென்று
ஊறியே மனதுதனி லுரைத்துப்பின்பு
உறவாக நிகடைதனை வாங்குவாங்கே. (121)

வாங்கியே நிகடையைத்தான் வாங்கிநீயும்
வளமாகச் சென்றுமே மனையிலேகி
தாங்கியே நிகடைதனைக் கல்வத்திட்டுத்
தாட்டிகமாய் மாவாக்கிப் பின்புகேளு
பாங்கியே காரியம் சட்டியிட்டுப்
பதிவாகக் கருங்காலித் தடியைக்கொண்டு
ஏங்கியே தடியாலே கடைந்துநைய
இதமாக மாவாக்கிப் பின்புகேளே. (122)

கேளுமே முன்னரைத்த நிகடையொன்று
கெடியாகக் காரியமாவு நாலு
பாளுமே போகாமற் சேர்த்தரைத்துப்
பதிவாகச் சரஉலையில் மொத்தையிட்டு
கூளுமே நாலம்மவைத்து ஊதும்போது
குணமாகச் செத்தசெம்பை யியந்தானும்
நாளுமே பிடித்திழுத்து உருக்கிக்கீழே
நலமாகக் கிட்டம்போ லிறங்குந்தானே (123)

இறங்குகின்ற கிட்டமதைத் தூக்கிப்பின்பு
இன்பமா யரைத்துண்டை பண்ணிநீயும்
துறங்கவே மேலுத்தா யூதும்போது
துடிபாக யிபமது உருகியோடும்
நிறங்குன்ரு மேற்ருனும் வடிந்துகல்ல
நிலையான பன்னடையின் செம்புவாச்சு
நிறமாக விச்செம்பு செய்துபாரு
திட்டமா யிதுபோலே களங்குதானே. (124)

களங்கமது பண்ணியே யெடுத்துருக்கு
கனிவாகக் காரமிட்டு உருக்கியாட்டி
உளங்குளிரக் கல்வமிட்டு யியற்தன்னை
உணர்வாகத் தகடடித்துக் கன்னிநீரால்
பளங்கதைகள் பேசாம லரைத்துவில்லை
பதியவே சேவலென்ற புடமுமிட்டு
தளமாக வெடுத்துப்பார் சிவக்துநிற்குக்
தனேயெடுத்துக் கல்வமிட்டுப் பின்புகேளே. (125)

பின்புதான் முன்னரைத்த நீராலாட்டிப்
பேசரிய புடம்போட மஞ்சளாகும்
அன்பாக யிப்படிக்குப் புடமுமஞ்சு
அடைவாகப் போட்டுமே எடுத்துநீயும்
தென்பாக முன்சத்துப் பலமும்நாலு
திடமான யிபச்செந்தூரம்எட்டு
தன்பார்வையாகவே ரெண்டுஞ்சேர்த்துத்
தடையறவே கன்னியாலரைத்திடாயே. (126)

அரைத்துமே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
அடைவாகப் புடம்போட்டு யெடுத்துநீயும்
பரைத்துமே திரியாதே குகையிலிட்டுப்
பதிவாக உருக்கிடவே வெள்ளையாகும்
கரைத்துமே பஞ்சமித்திரத்திற் சாய்த்துக்
கனிவாக மதினிலே பெட்டுரெண்டு
தரைத்துமே தங்கமது சேர்த்துருக்கித்
தடையறவே ஊதியெடு தங்கமாமே. (127)

தங்கமாம் புடமிறங்கும் தங்கந்தன்னைத்
தடையறவே வித்துமே செலவுசெய்து
உங்கள்குல மீடேறத் தொழுதுபோற்று
உறுதிபெறக் கந்திரிகள் மிகவும்பண்ணி
துங்கமயச் சோறுக்கிக் கொடுத்துப்பின்பு
துடியாகப் பிஸ்மில்லா ரகுமானென்று
பங்கயத்தில் தொட்டுமே தினவுபூண்டு
பத்தியாய்ச் செய்திடவே முத்தியாமே. (128)

முத்தியாய்த் தானரிப்புக் காரன்போலே
முடிவாகப் பாகமாய்க் கூட்டிவந்து
சத்தியே களங்குவைத்துச் சத்துப்பண்ணி
கலமாக வங்கச்சென்தூரம்பண்ணி
சித்திபெற யிதையெல்லாம் நீறிறுத்து
சிதராம லரைத்துமே சொல்லக்கேளு
புத்திபெற அவனிடத்திற் கொடுத்துநீயும்
புகழாகச் செம்பெடுக்கச் சொல்லலாமே. (129)

சொல்லுவாய் கைபாகம் கற்றுக்கொண்டு
சுகமாக அவனைத்தான் தள்ளிப்போடு
மல்லுவாய் பின்புநீ பாகமாக
மதிமயங்கிப்போகாமற் பாகம்பண்ணி
கல்லுவாய் செம்பெடுத்து மட்டஞ்சேர்த்து
கலமாக வித்துயிதைச் சிலவுசெய்து
கல்லுவாய் செம்பைத்தான் சென்தூரித்துக்
கருத்தாக உண்டுடுத்தித் திரிந்திடாயே. (130)

திரிந்திடவே யிப்படிக்குப் பாகமாகச்
செயமாகச் செய்திட்டால் திட்டமாகும்
பிரிந்துமே போகாமல் தினவிற்பூண்டு
பிசகாமல் செயமாகக் கூட்டிவாழு
வரிந்துமே வாதங்கை பொத்திக்கட்டி
வடிவாக பேவலது மருவுங்காலே
சரிந்துமே பாகமது தப்பிற்றானும்
சரியல்ல யெல்லாமும் பொய்யுமாமே. (131)

பொய்யாகப் போகாமற் களங்குதன்னைப்
பிரித்துமே ஆட்டியே செபதுபாரு
வையகத்தி லுனக்கெதிரி சீமாலுண்டோ
வடிவான சகலசித்து மாடலாகும்
மெய்பாக இக்காண்டம் தன்னிற்முலும்
மேன்மைபெறச் சகலசித்துஞ் சொல்லிப்போட்டேன்
நய்பாக மாகவே தடையில்லாமல்
நாடியே யெல்லாமுஞ் சித்தியாமே. (132)

சித்தியது வாகவென்முல் முன்னேநீயும்
செயமாக்க் களங்கம்வைத்துச் சீவனங்கள்
பத்தியாய்ப் பண்ணியே பின்புநீயும்
பதிவான செந்தூரம் பண்ணியுண்ண
மூத்திபெற முன்காண்டச் சுண்ணந்தன்னில்
மூவுலக மெச்சவே சொல்லிப்போட்டேன்
சுத்தியே பார்த்துநீ கண்டுகொள்ளு
நன்முக யாகோபு நலஞ்சொன்னேனே. (133)

நலமாக ஒருகளங்கிற் சொன்னமார்க்கம்
நாடியே யெல்லாமும் நடத்தையாக
புலமாகச் செய்துமே பாகமாகப்
புத்தியாய்க்கண்டுமே பிடித்துக்கொள்ளு
அலமாக அலையாதே நூலைப்பார்த்து
ஆடினால் சகலசித்தும் ஆடலாகும்
குலந்தனக்குக் கோடாலி வங்கத்தன்னைக்
கூட்டியெடு களங்கதுவும் குருவுமாமே. (134)

குருவாக ஒருசத்திற் சொன்னமார்க்கம்
கோடான கோடிக்குங் குறித்துக்கொள்ளு
பருவமாய் வேதையென்முல் வயதுகொஞ்சம்
பாதையில் வெகுபோக்குப் பற்றிப்பாரு
அருவமாய் நூலில்லா வாதமில்லை
அடியான நாயில்லாப் பாணையில்லை
கெருவமாய்ப் பேசாதே படித்துத்தேரு
கெடியான மாத்துத்தான்காணலாமே. (135)

காண்லா மென்றுமே சுட்டுச்சுட்டுக்
காரியத்தைப் பாராமற் றிரியவேண்டாம்
வாணுலே வதைத்துமே பேசவேண்டாம்
வடிவான மனந்தன்னே ஒக்கப்பண்ணு
சாணுளச் சத்துரித்துச் செய்துநீயுஞ்
சரியான பாகமதைத் தாக்கிப்பாரு
உண்ணவே பயிர்விளைந்த கதையைப்போலே
உற்றுமே பார்த்துநீ செய்திடாயே. (136)

## காரீயப்பதங்கம்.

செய்திடவே யின்னுமொரு பதங்கமார்க்கம்
செப்புகிறேன் செயமாகச் சுருக்குமெத்த
மைதிடவே காரீயம் பலமும்நாலு
மகிழ்வாக அயக்காண்டி தன்னிலிட்டு
நைதிடவே உருக்கிச்சாய் குமரிநீரில்
நலமாக மூவேழு தமழுஞ்சாய்த்து
பைதிடவே அயச்சட்டி தன்னிலிட்டுப்
பதிவாக வெடியுப்புப் பாதிபோடே. (137)

போட்டுமே வறுத்திடுநீ சாமம்ரெண்டு
பொன்னென்ற மஞ்சள்போற் சுண்ணமாகும்
கர்ட்டுமே அதையெடுத்துத் தூரவைத்துக்
கனிவாகக் கல்லுப்புப் பலமும்நாலு
பூட்டுமே சீனமது பலமும்நாலு
புத்தியுடன் கல்வமிட்டுப் பழச்சாற்றிலே
நாட்டவே சாமமரை வழித்துநீயும்
நலமாகச் சிறுசட்டி தன்னிற்போடே. (138)

போட்டுமே உலையில்வைத்து உருக்கிப்பாரு
போக்கோடே மஞ்சள்போ லுருகியாடும்
காட்டுமே அதைவழித்துப் புறம்பாய்வைத்துக்
கனமாக மூன்வருத்த வங்கத்தோடே
நாட்டுமே கல்லுப்பு உருகிநின்ற
நலமாக யிடைசேர்த்து கண்ணுயாட்டி
நீட்டுமே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
நோகப் புடமிட்டு எடுத்துவையே. (139)

வையப்ப தாளகமுஞ் சேருஒன்று
வகையாகத் திராவகத்தா லரைத்துச்சாமம்
மெய்யாக வில்லேதட்டிக் கதிரில்வைத்துக்
மேன்மைபெறக் கலையமது ரெண்டுதேய்த்து
பொய்யப்பா போகாமல் உள்ளேயிட்டுப்
போக்கோடே மூடியே சீலைசெய்து
பையவே அடுப்புதனி லேற்றியீயும்
பதிவாகச் சாமமெரி பருவமாமே. (140)

பருவமாம் சாமமெரி வழித்துயீயும்
பாங்காகக் கல்வமிட்டுக் கள்ளிப்பாலால்
உருவமா யரைத்துண்டை பண்ணியீயும்
உறுதிபெற முன்வங்கங் கவசங்கட்டி
தருவமா யொன்றுக்கு நாலுகட்டித்
தடியாகக் கதிரில்வைத்து யெடுத்துயீயும்
தருவமாய் சீலையது ஒன்றுசுத்தித்
தனிவாக அதின்பேரிற் கவசங்கட்டே. (141)

கவசமாய்க் கரியுப்புச் சுண்ணம்நேரே
கடிதாக யிடித்துமே கவசங்கட்டி
பவசமாய்க் குக்குடமாய்ப் போட்டெடுக்கப்
பதிவாகத் தாளகமுங் கவசத்தோடே
நவசமாய் நுழைந்துமே யிருந்துபோகும்
நலமாக யிப்படிக்குத் தாமும்நாலு
திவசமாய் வைத்துஎடு குருவுமாகும்
திட்டமாய்ச் செய்திடவே செயலுமாமே. (142

செயலாக நபிமாரைத் தொழுதுபோற்றிச்
செம்புருக்கிப்பத்துக்கு ஒன்றுதானும்
பயமில்லாத் தான்கொடுக்க மாத்துப்பத்து
பதிவான முறையாரும் பாருலோர்க்கு
நயமாகக் காவிக்கு மிறங்கும்பாரு
கன்னபிகள் செய்திடுவார் நாடிப்பாரு
தயவாக யேழைகட்கா யிறங்கிச் சொன்னேன்
தக்க பெரியோர்புத்தி யல்லதாமே. (143)

கல்லாகச் சால்திரங்க ளெல்லாந்தன்னே
நாடியே யுழைத்துநீ நாடிப்பார்த்து
கல்லாக மனதுதனி லெண்ணியேயும்
கருத்துறவே யூணிப்பார் கடினமில்லே
வில்லான ததுவஞ்சா லம்புதைக்கும்
வீணுக வஞ்சியாத மரமுங்கேளு
பொல்லாத கம்பத்துக் காகுமாப்போல்
புகலரிய யாகோபு புகன்றார்தானே. (144)

தானென்ற ஞானில்லா வாதிதானும்
தவித்துமே கேள்வியினுற் சுட்டுக்கெட்டு
ஊனென்ற சோத்துக்கு இடமில்லாமல்
உறுதியாய்த் தான்புலம்பித் திரிந்துகெட்டு
நானென்ற ஆணவத்தாற் கெட்டோமென்று
நாடியே பொய்சொல்லித் திரிவாரல்லால்
கானென்ற சுவான்மது போலேசுத்திக்
கருதியே யிலவார்கள் கணக்கிலாரே. (145)

கணக்கில்லா வாதந்தான் ரெம்பவுண்டு
கைபாக வரிசையது அதிலும்ரெம்ப
தணக்கமாய் களங்குசத்து அதிலும்ரெம்ப
தடைபற்ற கட்டுவகை கோடாகோடி
பிணக்கில்லாச் செந்தூர மெழுகுகோடிப்
பிரியமுள்ள சுண்ணங்கள் கோடாகோடி
துணக்கமாய் வாதங்கள் இதிலுங்கோடி
துடர்ந்துமே வாதம்வந்தால் சூட்சந்தானே. (146)

சூட்சமாய்ப் புளியுப்புக் கண்டுதேரு
சுருக்காகத் திரைபாகம் பார்த்துமீயும்
பாச்சவே பாதைபது மிகவும்பார்த்துப்
பதிவாக ஞானங்கள் மிகவும்பாரு
நாச்சமாய் மனதுதனி லுறுதியுற்று
நலமாகத் தானுணர்ந்து நாடிப்பார்த்து
பீச்சிட்ட பாவனைதான் பாலுபோலே
பேதமில்லாப் போலவே செய்துபாரே. (147)

பாரேநீ உலகத்தில் வாதிமார்கள்
பாதையிது தெரியாமலலைந்துசுத்தி
நாரேநீ உறுதிபெற்றுச் செய்யாமூடர்
நாடியே உறுதியற்றுச் சுட்டுக்கெட்டு
வாரேநீ திரைபாக மில்லாமற்றான்
வடிவான பொருளறியார் மார்க்கமில்லார்
தாரேநீ சொன்னபடி செய்யாமற்றான்
தாட்டிகமா யுறுதிமிக வேணுந்தானே. (148)

வேணுமே யேழையாம் வாதிக்குத்தான்
விதமாகப் புத்திதான் மிகவும்வேணும்
காணுமே நிறைபாக மறியவேணும்
கருதியே பொய்சொல்லா மார்க்கம்வேணும்
தானுமே யலையாம லிருக்கவேணும்
தடையறவே சாஸ்திரங்கள் பார்க்கவேணும்
கோணுமே நிலையுடனே யிருக்கவேணும்
கோடிதான் யோகமெல்லாம் குறிப்புமாமே. (149)

குறிப்பாகத் தருசனுட சுண்ணத்தாலே
கோடிகவ ருடலாங் கோடிவேலை
முறிப்பாகக் கட்டுத்தான் கோடியாகும்
முதற்கோடி முத்தியது கோடியாகும்
வெளிப்பான சுண்ணங்க ளதிலுங்கோடி
வேதைரெம்பச் சித்தியாந் தருசுனுலே
சரிபோன படிசொன்னேன் சார்ந்துபாரு
சஞ்சலத்தை விட்டுநீ தாக்கிப்பாரே. (150)

## மக்காதேசப் பெருமை.

தாக்கியே மக்காவின் தேசந்தன்னில்
சரியான நபிமார்கள் மெத்தவுண்டு
தூக்கியே வாய்பேசார் பொறுமைமெத்தத்
தணையாக அவர்களுக்குப் பணமும்ரெம்ப
நோக்கியே அலையாம லிருப்பார்பாரு
நொடிக்குள்ளே வாதங்கள் ரெம்பச்செய்வார்
பாக்கியவான் போலேதா னிருப்பாரப்பா
பதிவாகச் சென்னூரஞ் செய்வார்பாரே. (151)

செய்பவே கைபாக வரிசைரெம்பத்
தேசத்திற் றங்கமது விளையும்பூமி
மெய்யாகச் சொல்லார்க ளுறுதிரெம்ப
மேதினியி லவர்பெருமை மெத்தவுண்டு
கைபாக வரிசைகள்தான் மெத்தவுண்டு
கலங்கார்கள் மந்திரத்தின் கருத்துள்ளோர்கள்
சைபோக ஈவரத்தினம் விளையும்பூமி
சஞ்சாரம் ரெம்பவுண்டு சாதிப்பாரே. (153)

ரசக்கிணறு.

சாதிப்பார் மக்காவின் தேசத்தோர்கள்
சரியாக ஐந்நூற்போ சனேதான்னூரம்
வாதிக்கு மலையுண்டு நடுவிற்ரூனும்
வடிவான ரசக்கிணறு ஒன்றுஉண்டு
சோதித்த நபிமார்கள் மலையில்ரெம்ப
சுருதியுற்றுக் குளிகையிட்டுச் சென்றுபோனேன்
பாதியே அவரைத்தான் கண்டுகானும்
பதிலாகத் தொண்டுகள்தான் பண்ணினேனே. (153)

பண்ணியே சிறிதுகா லங்கிருந்து
பதிவான ரசக்கிணறு எங்கேயென்றேன்
தண்ணியே சொன்னார்கள் குளிகையிட்டுச்
சுருதிபெறப் பறந்துமே கிணறினோரம்
தன்னியே சுரக்குடுக்கை கையிற்கொண்டு
தாட்டிகமா யவ்விடத்திற் போயிறங்கி
சன்னியே கிணற்றினுள்ளே குடுக்கைதன்னைச்
சரியாக விட்டெடுக்கும் போதுதானே. (154)

போதுமே சூதமது நிறைத்தும்போது
துடியாக மேலண்டம் பறந்துபோனேன்
வாதுமே செய்யாமல் சூதந்தன்னை
வகையாக வெடுத்துமே மக்காதேசம்
சாதுவாய் வந்துவிட்டேன் நபிமாரோடே
சரியான திருசுசுண்ணம் வைத்துகானும்
நீதியாய் சூதத்தைக் கட்டிகானும்
நிலையான குளிகைரெண்டு செய்திட்டேனே. (155)

செய்தமே கையிலொன்று வாயிலொன்று
சிறப்பான இடுப்பிலொன்று கட்டிக்கொண்டேன்
பைதமே லோகமெல்லாம் பறந்துசுற்றிப்
பதிவான மலைகளெல்லாம் பார்த்துநானும்
மெய்தமே வெகுகோடி முனிவர்சித்தர்
மேதினியில் ரசவாதமிகவுங்கண்டு
தைதமே கைபாக வரிசையாக
நானறிந்து பாடினேன் நலமாய்த்தானே. (156)

நலமாக நிகண்டதுதான் படித்தத்தேறி
நாடியே சுண்ணமறுநூறுபாடி
பிலமாக அதைக்குறுக்கிச் சுண்ணந்தன்னைப்
பேதியா மூன்னூறு பாடித்தேர்ந்து
கலனில்லாச் சுண்ணமூன் னூறுதன்னைக்
கருத்தாகக் குருநூல்நூற் றைம்பத்தைந்தில்
விலகாமல்வாதத்தின் மறைப்பையெல்லாம்
விருப்பமாய்ப் பாடினேன் விளங்கத்தானே. (157)

விளங்கவே ரசவாதங் கருணைகூர்ந்து
விரும்பினேன் செய்பாக வரிசையாக
உளங்குளிர மட்டங்கள் சேர்க்கும்பாகம்
உத்திநின்ற களங்கமெல்லாம் உறுதிகண்டு
தளங்காமல் வங்கமென்ற சுண்ணப்போக்கைத்
தாட்டிகமாய்ப் பாடினேன் தன்மையாக
பழங்கதைகள் பேசாமல் நூலைப்பார்த்துப்
படிப்படியாய்த் துறையெல்லாம் பாடினேனே. (158)

பாடினேன் மதுரகவி யாகத்தானும்
பக்குவமாய்க் குறியறிந்து வாசித்தோர்கள்
கூடியே குணமறிந்தோர் செல்வமுத்தர்
கொடிதான நூலறிந்தோர் குணங்கள்கண்டோர்
வாடியே திரியாத பேர்கள்தானும்
வகையான தகையறிந்தோர் மார்க்கத்தோர்கள்
பாடியே பதமுற்றோர் பத்திபெற்றோர்
பகரிய நூலறிந்தோர் பாகத்தோரே. (159)

பாகத்தோர் நபிமார்கள் வாதங்கண்டோர்
பக்குவமாய்ச் சுண்ணமென்ற பதமுத்தோர்கள்
யோகத்தோர் கருவறிந்தோர் உறுதிபெற்றோர்
உகங்கண்ட பேர்களுட பாதம்பெற்றோர்
வாகத்தோர் பேதங்கள் நிகவுங்கண்டோர்
வடிவான பதிகண்ட மார்க்கத்தோர்கள்
சாகத்தே நினைவில்வைத்துப் பணிந்தபேர்கள்
சாதகமாய் வாதம்வருந் தன்மைதானே. (160)

## அயச்செம்பு.

தன்மையாய் அயச்செம்பு சாற்றக்கேளு
தரியாம லிதலெருவு முன்னேபாரு
உன்மையாய் நாதாக்கள் தன்மேலாணை
உற்றுமே பாராட்டா லுனக்குமாணை
வண்மையா யரபொடிதான் பலமும்பத்து
வடிவாகத் தருசதவும் பலமும்பத்து
தண்மையாய்க் கெந்தியது பலமும்யேழு
கருத்தாகக் கல்வமிட்டு அரைக்கக்கேளே. (161)

அரைக்கவே பழச்சாறு தினமும்விட்டு
அடைவாக நாள்மூன்று அரைத்துநீயும்
பிரிக்கவே கதிர்தனிலே காயவைத்துப்
பின்புதான் கல்லெண்ணெய் சுவறவூற்று
கரைக்கவே கொதியிட்டு உருக்கித்தீரு
கசடற்று வெள்ளிபொன்போற் கண்ணிட்டாடும்
தரைக்கவே வெங்காரங் கொஞ்சமிட்டுத்
தானுருக்கு உருகியது மணியுமாமே. (162)

மணியெடுத்து அடித்திடவே வெட்டையாகும்
மயங்காமல் தீக்கருந்த செம்புகாண
தனியாகச்சொல்லுகிறேன் உற்றுக்கேளு
தடையறவே கள்ளமது போக்கித்தானும்
வனியாகப் பலம்பத்து நிறுத்திக்கொண்டு
வடிவாகக் கற்றுழை நீரிற்றணும்
தனிவாகத்தாம்பத்து உருக்கிச்சாய்த்துத்
தடிபாகத் தகடடித்துக் கல்வத்திட்டே (163)

கல்வத்தி லிட்டுமே சொல்லக்கேளு
கனிவாகக் கன்னியா குமரிக்கற்பம்
கல்லொத்து யிட்டுமே நேகவாட்டி
கலமாக வில்லைதட்டிக் கதிரில்வைத்து
செல்லுத்து ஓதினி லிட்டுமெள்ளச்
செயமாகப் புடம்போட்டு எடுத்துக்கல்வம்
வில்வித்தை பதுபோலே முன்னீராட்டி
விதமாகப் புடம்போடு தாமுமஞ்சே. (164)

அஞ்சுபுடம் போட்டுமே யெடுத்துப்பாரு
ஆதியா மஞ்சள்போல் சிவந்துநிற்கும்
கெஞ்சியே வாதமெல்லா மேவல்கேட்கும்
கெடியான வங்கத்தின் பெருமைமெத்த
தஞ்சியே நியாதே சொல்லக்கேளு
தடிபாக முன்னுருக்கும் அயத்திலேலே
வஞ்சியே யிடைசமனுய்ச் சேர்த்துரீயும்
வடிவாக முன்கன்னி நீராலாட்டே. (165)

ஆட்டியே புடம்போட்டுக் குகையிலிட்டு
அதட்டியே உருக்கிப்பா ரீயமாகும்
தேட்டிலே யிதக்குப்பேர் அயயீயமாச்சு
திடமாகும் யிதுவேலி சொல்லப்போகா
நாட்டிலே கிடையாது யிந்தயீயம்
நானறிந்து வழைக்கா யிரங்கிச்சொன்னேன்
கூட்டியே சகலமுந்தா னுள்ளேகொள்ளும்
குணமாகு மிதன்பெருமை கூறினேனே. (166)

கூறினே னிதன்பெருமை நமிமாரெல்லாம்
கூறியது சித்தரெல்லாஞ் சொல்லமாட்டார்
பாரிலே சொல்லாதே போக்கைத்தானும்
பதிவாக நான்வேதம் புகுந்ததாலே
சாரியே நிசந்தன்னைச் சொல்லிவிட்டேன்
சரியாக யேழையாம் வாதிக்குத்தான்
ஊரியே உழைத்தோர்க்குக் கிட்டுங்கிட்டும்
உண்மையிது சத்தியமா யுறுதிதானே. (167)

## பஞ்சமித்திரம்.

உறுதியா யிப்படிக்கு வைத்துநீயும்
உண்மைபெறப் பஞ்சமித்தி ரத்தைக்கேளு
அருதியாய் நல்லெண்ணெய் தேங்காய்ப்பாலும்
அடைவான நெய்யோடு துப்பாக்கூட்டி
வருதியா யிலுப்பயெண்ணெய் யிந்தஅஞ்சும்
வளமாக இடைசமனுய்க் கூட்டிக்கொண்டு
பருதிபெற முன்சத்து தனேயருக்கிப்
பாகமாய் மூன்றுதரம் சாய்த்திடாயே. (168)

சாய்த்திடவே காரமஞ்சள் தானேபோகும்
சரியான வங்கமது குருவுமாகும்
ஏத்திடவே உடைத்துப்பா ருடையுங்கண்டாய்
இதமாக வங்கமது வெட்டையாகும்
கத்திடவே வெள்ளியெட்டில் ரெண்டுசேர்த்து
கலமாக உருக்கியே தங்கமொன்று
கோத்திடவே சேர்த்தூத மாத்தியெட்டு
குணமாகும் வித்துமே செலவுசெய்யே. (169)

செய்துதான் பின்புமே சொல்லக்கேளு
செயமான வங்கவெட்டை பலமும்காலு
கைதுமே தங்கமொன்று நாகமொன்று
கருணைதரச் சேர்த்துருக்கிப் பின்புநீயும்
மைதுமே வெள்ளேபோல் வெட்டையாகும்
நாட்டிலே சொல்லாதே ரசமூங்கெந்தி
மைதுமே யிடைசமனுய்ச் சேர்த்துநீயும்
மகிழ்வாகக் கல்வத்தி லாட்டிடாயே. (170)

ஆட்டியே யிருசாமங் கண்ணிப்பாலால்
அதைவழித்து வில்லேபண்ணிக் கதிரில்வைத்து
நாட்டிகமாய்ப் புடம்போடு சிவப்புமாகும்
தனேயெடுத்து அல்லாவைத் தொழுதுபோற்றி
காட்டியே நவலோகம் நூற்றுக்கொன்று
கர்த்தனுட பாதத்தைத் துதித்துப்போற்றி
நேட்டுவரு மென்றுமே கொடுத்தருக்குத்
திடமான மாத்துத்தான் பத்தமாமே. (171)

பத்தான செந்தூரம் தேனிற்றூணும்
பணவிடைதா னந்திசந்தி தினமுமுண்ண
வித்தார மாகவே தேசந்தானும்
விதமான தங்கம்போல் மேனியாகும்
கத்தாவைப் போலவே தேகங்காணும்
கனிவாகக் கற்போலாம் நோய்களெல்லாம்
சித்திபெற்றுத் தவிடுபொடி யாகும்பாரு
செல்வன்யா கோபுசொன்ன திறமைதானே. (172)

தானென்ற செந்தூரம் நபிமார்சொன்ன
தாட்டிகத்தை உங்களுக்குச் சாற்றினேன்பார்
வானென்ற காயசித்தி உடனேயாகும்
உறுதிபெற நரம்புதான் பசுமையாகும்
வானென்ற கண்தானும் செவ்வலரிபோலாம்
வடிவான நபிமார்க ளாடுமாட்டு
கோனருளால் பத்தியமா யுண்டுதேரு
குணமாகு மணமாகுங் கூர்ந்துபாரே. (173)

கூர்ந்துபார் நபிமார்கள் சொத்தைத்தானும்
குணமாக ஒருவருக்குஞ் சொல்லவேண்டாம்
வார்ந்துமே பாகமாய்ச் செய்துகொள்ளு
வடிவான விந்துவும் வருகாதையா
தார்ந்துமே லேறுங்கி ழோடிடாது
தாட்டிகமாய் மேனியது வச்சிரகாயம்
நார்ந்துமே மேனியது யிப்படிக்கு
நலமாகும் பொருளைத்தா னுட்டிப்பாரே. (174)

நாடியே யுலகத்தில் வாதம்பொய்யோ
நலமாகக் கைபாகம் பொய்யேயில்லை
கூடியே சிஷனுடன் மருவவேணும்
குணமாகப் பணிவிடைகள் கூறவேணும்
தேடியே மனதொத்த சிஷன்வேணும்
திடமான கைபாக வரிசைவேணும்
நீடியே திரியாதே அயத்தின்செம்பை
உற்றுணர்ந்து பார்க்கவே உறுதிபாமே. (175)

உறுதியாய்ப் பத்தகிற பாகம்வேணும்
உண்மையாய்ச் சரக்கதுவும் நிருக்கும்பாகம்
அறுதியாய்ச் செய்திடவே பலனுமாகும்
ஆடியே திரியாதே ஒன்றுமில்லை
நிருதியா யுன்னினைவிற் பூணவேணும்
நித்தமுந்தான் சரக்குகளைப் பார்க்கவேணும்
குருதிபோல் தேகத்திலிருக்கவேணும்
கூகூகூ வாதமிதிற் கொள்ளாயாமே. (176)

## அப்பிரேகச்சத்து.

கொள்ளாயா மப்ரேகச் சத்துக்கேளு
கொடியான அப்பிரக முதற்றரந்தான்
துள்ளாயம் ரெத்தவர்ணம் இரண்டாம்பச்சம்
துடியான கிருஷ்ணவர்ணம் மூன்றும்பச்சம்
வள்ளாயாங் கொள்ளிலையின் சாறுதன்னில்
வடிவாக நாள்மூன்று டோலைக்கட்டி
பள்ளாயம் சட்டிதனி லெரித்துவாங்கு
பதிவாக அப்பிரகஞ் சுத்தியாமே. (177)

சுத்தியது வானஅப் ரேகம்நாலு
துடியான வெள்ளைப்பா சாணம்நாலு
மூத்தியது ரெண்டுமொன்று யரைத்துநீயும்
மூக்கியமாய்க் குகையிலிட்டு உருக்கிப்போடு
புத்தியா யப்பிரகஞ்சத்துமாகும்
புகலரிய சத்திநிறஞ் சொல்லக்கேளு
லித்தியமாய் வெங்கலம்போற் றகர்த்துநிற்கும்
நிலையான சத்துவித னோர்மைபாரே. (178)

நோர்மைபா ரப்பிரகச் சத்துதன்னை
நிலையாக உருக்கியே மெழுகுகட்டி
வார்மையா யுருக்கியே கிண்ணிவார்த்து
வளமாகக் கிண்ணியைத்தான் சிவிப்போட்டு
தார்மையாய்க் கிண்ணிக்குள் சரியாய்ச்சூதம்
தாக்கிட்டு ஊமத்த னிலையின்சாறு
கோர்மையாய் நிறையாக விட்டுநீயும்
கொதியிட்டு இருசாமஞ் சென்றபாரே. (179)

சென்றுபார் இட்டலிபோற் கட்டிப்போகும்
செயமாகும் என்வசனம் பொய்போகாது
அன்றுமே உருட்டியே பாணிதன்னில்
அடைவாகப் போட்டுமே திரிநாள்வைத்து
கன்றுமேயெடுத்தநீ உண்டையாகக்
கணக்காக யிருபத்தொன் றுண்டைபண்ணி
நன்றுகச் செய்தமே கதிரில்வைத்து
நலமாக அப்ரேகக் கவசம்பண்ணே. (180)

பண்ணியே கதிரில்வைத்துக் காய்ந்தபின்பு
பதிவாகக் குக்குடத்தின் புடமுமிட்டால்
நண்ணியே சூதத்தை யெடுத்துப்பாரு
நலமாகக் கதிரினிலே நின்றாடும்
உண்ணியே உருகினதோர் சூதம்கானு
உறவாகத் தங்கமொன்று நாகமொன்று
கன்னியே உருக்கியெல்லாங் கல்வத்திட்டுக்
காரணமா யினனுமொன்று கருதிக்கேளே. (181)

கருதியே கெந்தகமும் பாதிபோட்டுக்
கல்வத்தி லிட்டுஅரை நாலுசாமம்
பருதியே கன்னியா குமரிகந்தம்
பதிவாக யின்னீரி லரைத்துமெள்ள
நருதியே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
நலமாக ஓருபுடத்தில் செந்தூரந்தான்
உருதியதா யாகிவிடும் உண்மையாகும்
உற்றநவ லோகத்தில் நூற்றுக்கொன்றே. (182)

ஒன்றுகச் செந்தூரந் தனைக்கொடுக்க
உற்றுமே நவலோகந் தங்கமாகும்
பன்றுன நோயெலாந் தவிடுபொடியாகும்
பதிவான காயமது கற்போலாகும்
தின்றுன தீனியுமோ சொம்பவேணும்
திடமாகும் நரம்புகளு மிறுகியேறும்
கன்றுன பசப்போலே கறக்கும்பாரு
கனிவான பொருளறிந்தால் வாதிதானே. (183)

வாதிதா னென்றுவாய்ப் பேச்சுப்பேசி
வகையாகச் சொல்லியே மாண்டுபோன
சாதிதான் யெத்தவுண்டு உலுத்தமாண்பர்
தன்னைத்தான் நெம்பவே மெச்சிக்கொள்வார்
கோதியே கிளிப்பிள்ளை பேசுமாப்போல்
குறும்பாகப் பேசியே கூறிக்கூறி
நீதிதான் சொல்வார்போல் பொய்கன்சொல்லி
நீலிலத்திற் பேசியே உருளுவாரே. (184)

உருளுவார் புரட்டுள்ள வாதிகார்கள்
உற்றுமே நூலெல்லாம் பொய்யேயென்பார்
அருளுவார் மதம்பிடித்துப் பேசுவார்கள்
ஆதியந்தந் தானறியா மட்டிவாதி
குருளுவார் பொய்சொல்வார் கொடியர்கண்டாய்
குணமில்லார் மணமில்லார் குருட்டுவாதி
வருளுவார் வகையறியார் வடிவமில்லார்
வண்மைகளைச் சொல்லாதே மார்க்கத்தோரே. (185)

## நாகச்செம்பு.

மார்க்கமா யின்னமொன்று நாகச்செம்பு
வடிவாகச் சொல்லுகிறேன் மகிழ்ந்துகேளு
ஏர்க்கவே நாகமது பலமும்பத்து
இதமாக உருக்கிமெள்ள யிலுப்பைநெய்யில்
கார்க்கவே தாம்பத்து உருக்கிச்சாய்த்துக்
கனிவாகக் கசடற்றுக் கனிவாய்நன்றுப்
பார்க்கவே குகையிலிட்டு உருக்கிக்கொண்டு
பதிவாக எட்டுக்கு ரெண்டுகேளே. (186)

ரெண்டுமே சூதமது சேர்த்துருக்க
நிலையாகப் புட்டாகு மெடுத்துவைத்து
கண்டுமே துரிசியது பலமும்பத்து
கனிவாகச் சட்டிதனில் கிளிஞ்சில்நீறு
பண்டுபோல் பாதியிட்டே அதன்மேல்நீலன்
பதிவாக வைத்துமே கிளிஞ்சில்நீற்றை
விண்டுமே அதன்மேலே கொட்டிநீயும்
விதமாக அமுக்கியே சொல்லக்கேளே. (187)

சொல்லவே அடுப்புதனில் வைத்துமூடி
சுகமாகத் தீயெரிப்பாய் நாலுசாமம்
கொல்லவே பிரித்துப்பார் தருசுநீறிக்
குணமாகயிருந்துவிடுங் காரமாக
கல்லவே மூன்றாகத் தன்னிலிட்டு
நலமாகக் கற்றுழைச் சாறுவிட்டு
தல்லவே யிருசாம மரைத்துப்பின்பு
தடையறவே தாளகத்தை நிறுத்துக்கேளே. (188)

நிறுத்துமே மூன்றுந்தான் நேரேசேர்த்து
நேராகக் கன்னிநீர் தன்னைவிட்டு
பருத்துமே யிருசாம மரைத்துவில்லை
பக்குவமாய் குக்குடத்தின் புடமுமிட்டு
தருத்துமே யெடுத்துநீ கல்வமிட்டுத்
தகைபெறவே காரியம் பலமும்பத்து
வறுத்துமே தகடடித்துப் பிச்சுப்போடு
வடிவாகக் கன்னிநீர் தன்னலாட்டே; (189)

ஆட்டியே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
அடைவாகக் குக்குடத்தின் புடமுமிட்டு
நாட்டியே யெடுத்துப்பார் மஞ்சளாகும்
நலமாகக் கல்வமிட்டு முன்னீராலே
பாட்டியரை வில்லைகட்டிக் கதிரில்வைத்துப்
பதிவாக முன்போலே புடமுமிட்டு
நாட்டிலே சொல்லாதே யிப்படிக்கு
நலமாக அஞ்சுபுடம் போட்டிடாவே. (190)

போட்டிடவே மஞ்சளா மெடுத்துநீயும்
போக்கோடே முன்னகம் புடமுமிட்டு
ஆட்டியே வில்லைக்குப் பாதிகாரி
அடைவாகச் சேர்த்துமே கல்வமிட்டு
நாட்டியே கன்னிநீர் தன்னலாட்டி
நலமாக வில்லைகட்டிக் கதிரில்வைத்து
பாட்டியே புடமுமிட்டு யெடுத்துநீயும்
பதிவாகப் பின்புதான் பகரக்கேளே. (191)

பகரவே சரவுலியில் வைத்தூதி
பதிவாகத் தங்கம்போல் மணியுமாகும்
நகரவே பஞ்சமித்தி ரத்திற்சாய்த்து
நாடியே யெடுத்துஅடி உடைந்துபோகும்
தகரவே வங்கவெட்டை பிதற்குப்பேரு
தாட்டிகமாய் வெள்ளியெட்டில் ரெண்டுசேரு
உகரவே ஆகியெடு தங்கமொன்று
உற்றுமே சேர்த்துயெடு மாத்துயெட்டே. (192)

எட்டானமாத்ததுவை வித்துரீயும்
இனமாகச் செலவுசெய்து வைத்துக்கொண்டு
கட்டாகச் சென்தூரம் செய்யக்கேளு
களங்காமற் பலம்நாலு குகையிலிட்டு
திட்டமாய் நாகமது பலமுமொன்று
திடமான தங்கமது பலமுமொன்று
பட்டமாய்ச் சேர்த்துருக்கப் புட்டமாகும்
பதிவாக ரசகெந்தி யிடையேசேரே. (193)

இடைசேர்த்துக் கல்வமிட்டு முன்னீராட்டி
இதமாக வில்லைகட்டிக் கதிரில்வைத்து
கடைபெறவே புடமிட்டு எடுத்துப்பாரு
கலமாக முருக்கம்பூப் போலேயாகும்
குடையாக நவலோகந் தன்னிலீயக்
குற்றமில்லா மாத்ததுதான் பத்துமாகும்
சடையில்லா உப்புக்குங் காவிக்குந்தான்
சரியாக பிறங்கிவிடுந் தன்மைதானே. (194)

தன்மையாய்ச் சென்தூரம் பணமவ்வீதம்
தாக்கிடவே மண்டலத்தி லந்திசந்தி
உண்மையா யுண்டுவர நோய்களெல்லாம்
உறுதிபெறத் தவிடுபொடி யாகும்பாரு
வண்மையாய்ச் சடலமெல்லா மிறுகியேறும்
வடிவாக வாய்பேசா திருந்துகொள்ளு
தண்மையல்ல இம்மொழிகள் நிசமதாகும்
திடியான சித்தியெல்லாம் வங்கந்தானே. (951)

வங்கத்தைச் சத்தென்ற மார்க்கங்கூட்டி
வடிவான பொருளறிந்து செத்தசெம்பை
பங்கம்வா ராமலே எடுத்துநீயும்
பதிவான பாதையிதிற் பத்திக்கொள்ளு
சிங்கம்போ லெல்லாமுஞ் சித்தியாகும்
சிறப்பான பொருளெல்லாம எளிதிலாகும்
உங்கள்குல மீடேற உறுதிபாரு
உற்றுணர்ந்த சித்தியெல்லா முறுதிகாணே. (196)

காந்தச்சத்து.

சித்தியாங் காந்தமது பலமும்பத்து
சிறப்பாகக் குன்றிபோலுடைத்துக்கொண்டு
முத்திபெறச் செம்மறிப்பால் படிதான்நாலில்
முனிவாகப் போட்டுமே யெரித்துத்தீரு
சத்தியமாய்ச் சுத்திபது ஆகுங்கண்டாய்
தணியெடுத்துக் கல்வத்திலிட்டுநீயும்
பத்தியாய்க் கெந்தகமும் பலமுமூன்று
பதிவான வெங்காரம் பலமுமொன்றே. (197)

லொன்றுகத் தருசியது பலமுமைந்து
உறுதிபெற மிதுவெல்லாங் கல்வத்திட்டு
நன்றுகப் பழச்சாறு சாமமாட்டி
நலமாக வழித்துவில்லை காயவைத்து
பன்றுகப் புடம்போட்டு யெடுத்துநீயும்
பரிவாகக் குகையிலிட்டு உருக்கிப்பாரு
கன்றுக மணிபோலே சத்துமாகும்
காரியமா யிப்படிக்குத் திராமுமஞ்சே. (198)

திரமாக அஞ்சுதர முருக்கிப்பாரு
திட்டமாய் வெள்ளிபொன்போற் கண்விட்டாடும்
அரமாகச் சடகற்றி யெடுத்துநீயும்
அலியாமற் சொல்லுகிறே னதனைக்கேளு
பரமான காரியம் பலமும்பத்து
பத்தியா யெடுத்துமெள்ளக் கன்னிநீரில்
வாமாக உருக்கிச்சாய் சுத்தியாச்சு
வடிவாகத் தகடடித்து மார்க்கங்கேளே. (199)

கேளுமே கற்முழைப் பாலிலே
கெடியாக யிருசாம மரைத்துவில்லை
நாளுமே கதிரில்வைத்துச் சொல்லக்கேளு
நபிமார்கள் தானறியப் புடமுமிட்டு
பாலுமே யெடுத்துப்பார் மஞ்சளாகும்
பத்தியதா யிப்படிக்குத் தாமும்பத்து
காலுமே யேங்காமற் போட்டெடுத்துக்
காரணமாய்ப் பின்புதான் சொல்லக்கேளே. (200)

சொல்லவே காந்தத்தின் சத்துகேளே
சுருதிபெறச் சமனிடைக்குச் சேர்த்துநீயும்
வெல்லவே ரெண்டுமொன்றுப்க் கல்வத்திட்டு
விருப்பமா யரைத்துவில்லை காயவைத்து
நல்லவே புடமிட்டு எடுத்துப்பாரு
நபிமார்போ லிருக்குமது சத்துத்தானும்
வல்லமையாய்க் குகையிலிட்டுக் காரங்கூட்டி
வடிவாக உருக்கிடவே வெண்ணையாமே. (201)

வெண்மைதனைப் பஞ்சமித்தி ரத்திற்சாய்த்து
வீருதுபடக் கசடகற்றிப் பின்புநீயும்
உண்மையா யுடைத்துப்பார் வெட்டையாகும்
உறுதிபெற வெட்டைதனை ஊதிப்போட
தன்மையாய்ச் செம்பாகும் செம்புதன்னைத்
தானெடுத்து வெள்ளிதனி லெட்டிரண்டு
கண்மையாய்ச் சேர்த்துருக்கத் தங்கமாகும்
காரணமாய்த் தங்கமதைக் கூடச்சேரே. (202)

சேருமே யெட்டுக்கு ரெண்டுதானும்
சித்தமாய் மாத்தளவு மெட்டுமாகும்
பாருமே யிதைவித்துச் செலவுசெய்து
பகரவே சென்னூரம் பண்ணக்கேளு
வேருமே காந்தத்தின் செம்புதானு
விதமான நாகமொன்று தங்கமொன்று
சாருமே குகையிலிட்டு உருக்கிப்பாரு
தானுடைக்கக் களங்காகுந் தன்மையாமே. (203)

தன்மையாய் ரசங்கெந்தி கூடச்சேர்த்து
தடையறவே கல்வமிட்டுக் கன்னிப்பாலால்
உண்மையா யரைத்துமெள்ள வில்லைகட்டி
உறுதிபெறக் கதிரில்வைத்துப் புடமும்போட
தண்மையாய்ச் சிவந்துசெர் தூரமாகும்
தூரிதமிதை நவலோகந் தன்னிலீய
அண்மையாய்த் தசமாத்தா மறிந்துபாரு
ஆதியாம் நபிமார்கள் சொத்துமாமே. (204)

சொத்தெடுத்துக் கந்திரிகள் மிகவும்பண்ணிச்
சுருதிபெறச் சோறுக்கி யேழைக்குத்தான்.
சத்தெடுத்துக் கொடுத்ததுபோற் சோறுதன்னைச்
சரியாகக் கொடுத்துவிடச் சுகிர்தமாகும்
நித்தமுந்தான் செய்யாதே வருஷமொன்று
நிலையாகப் பண்ணியே உலகில்விற்று
புத்தியாய் வைத்துமே உண்டுதேறப்
புகலரிய நிம்மார்க்கம் புத்தியாமே. (205)

ஆமேதான் காந்தத்தின் செந்தூரந்தான்
அடைவாகமண்டலமு முண்டுதேறு
நாமேதான் தேகமது கற்றாணுகும்
நாதாந்த சாரமது நளுகாதையா
பூமேவு நிலந்தனிலே புத்தியுண்டாம்
புகலரிய நபிமார்க ளாடுங்கர்மை
காமேவு செந்தூரந் திறமுமெத்தக்
கனிவாக வுண்டுமே கண்டுகொள்ளே. (206)

கண்டுகொண்ட பிற்பாடு மனதடக்கம்
கருத்தாலே பொய்களது சொல்லவேண்டாம்
தண்டுமுண்டாய்த் திரியாதே யிந்தநூலைச்
சரியாகப் புத்தியாய்ப் படித்துக்கொள்ளு
பண்டுபழங் கதைபேசாப் பருவஞ்செய்து
பதிவான பொருளேத்தான் பத்தியாக்கி
மூண்டுபடாக் காந்தத்தின் செம்புவைத்து
மூடித்துமே நபிசொத்தை மூனிந்துபாரே. (207)

மூனிந்துமே அயச்செம்பு காந்தச்செம்பு
முனிவான கெந்தகத்தின் செம்புகூட்
கனிந்துமே சத்தெல்லாஞ் செம்பெடுக்கக்
கருதிபே வங்கத்தைப் பங்கம்பண்ணி
வனிந்துமே கூட்டியரை பின்புருக்கி
வடிவாக வூதியெடு மார்க்கமாகும்
பணிந்துமே சொல்லாதே பொருள்களுண்டாம்
பாதையிது வெகுபாதை பத்தியாமே. (208)

பத்தியாம் பொருளேது வென்றுற்கேளு
பதிவான கைபாக வரிசையாலே
முத்தியாய்ச் செய்துதான் மார்க்கங்கண்டால்
முடியாமற் கைபாகந் தப்பிற்றுலை
நித்தியமா யொன்றுந்தான் முடியாதாகும்
நினைவாகப் படித்திட்டாற் பலனுமாகும்
சித்திபெறச் சொன்னதொரு மார்க்கந்தன்னைத்
திட்டமாய்ச் செய்துமுடி திண்ணந்தானே. (209)

## லோகத்திராவகம்.

திண்ணமாம் லோகமென்ற புகைநீர்தன்னைச்
சிறப்பாகச் சொல்லுகிறே னுற்றுக்கேளு
தண்மையாய்ச் சகலசத்துக் கிதுவேயாதி
தடையறவே கட்டுகளுக் கிதுவேயாதி
உண்மையாய் லோகத்துக்கிதுவே யாதி
உறுதிபெறக் கட்டுதற்கு வரிசையாகும்
உண்மையாய்த் தாளகந்தான் லோகத்துக்கு
உறுதிபெற யிதனுண்மை உற்றுப்பாரே. (210)

உத்துமே வெடியுப்புப் பலந்தானூறு
உறுதிபெறச் சீனமது எண்பத்தஞ்சு
பத்திபெறத் தருசதுவும் நாற்பதாகும்
பதிவான சாரமது இருபதாகும்
முத்தியே கல்லுப்புப் பலந்தான்பத்து
முனையான பூநீறு பலந்தானஞ்சு
நித்தியமாய்க் கெந்திபுப்பு பலந்தான் மூன்று
நிலையாக உருவியுப்பு பலந்தானென்றே. (211)

ஒன்றுகக்கழுதையுட கத்தத்தாட்டி
ஓகோகோ பிருசாம மரைத்தபின்பு
ஒன்றுகக் கடத்திலிட்டு வாலைமூடி
நலமாக உளுந்துமண் பிலக்கச்செய்து
கன்றுக அடுப்பேத்தித் தீயைமூட்டிக்
காரியமாய் முன்னீருவெள்ளையாகும்
பன்றுன வெள்ளையைத்தான் நீக்கிப்போடு
பதிவாக மஞ்சள்நீர் தன்னைவாங்கே. (212)

வாங்கியே அரக்கென்ற சூப்பிதன்னில்
வடிவாக அடைத்துமே சொல்லக்கேளு
ஏங்கியே திரியாதே சரக்கெல்லாந்தான்
இதில்நன்னத்துச் சூடனுட தீயில்வாட்டு
பாங்கியே கட்டியது கரியிலாடும்
பாதையாம் வெகுகோடி பாதையாகும்
தூங்கியே திரியாதே யிந்தவித்தை
தொல்லுலகில் ரசவாத மேவலாமே. (213)

மேவலாங் கட்டினதோர் சரக்கைத்தானும்
மிதமில்லா வுலோகந் தன்னிலீய்ந்தால்
காவலாந் தனித்தனியே வேதையாகும்
கைகண்ட வித்தையிது கருவாய்ப்பாரு
தாவலாஞ் சொன்னதெல்லாம் நிசமுமாகும்
சத்தியமாய்ப் புகைநீரை வைத்துநீயும்
தூவலே சரக்கெல்லாம் சொல்முன்கட்டும்
தொல்லுலகில் ரசவாதந் தஞ்சும்பாரே. (214)

தஞ்சவே மக்காவின் தேசந்தன்னில்
குடியாக நபிமார்க ளாடுமாட்டை
பஞ்சதுபோற் பரக்காமற் சொல்லிப்போட்டேன்
பதிவாக நாதாக்கள் செய்யுமார்க்கம்
கொஞ்சவே சொல்லிவிட்டே னின்னூல்தன்னில்
கொள்ளைகொள்ளை வாதமிது நேர்மையாகும்
தஞ்சமாய்ப் பார்த்தாக்கால் சகலசித்தும்
தடையறவே யாடலாந் தாக்கிப்பாரே. (215)

தாக்கிட்டு ஒருயிடத்தி லிருந்துநீயும்
தாட்டிகமாய்ப் பொய்சொல்லா வேதைபாரு
சோக்கிட்டு பெண்ணோரம் நூலைப்பாரு
நொடிக்குள்ளே வாதமது பேவலாகும்
பாக்கிட்ட தறுபோலே சென்தூரங்கள்
பதிவாக வைத்துமே பலனைக்கண்டு
சாக்கிட்டுத் திரியாதே சூஸ்திரத்தைத்
தன்மையாய்ப் பார்த்தாக்கால் நிலைக்கும்பாரே. (216)

நிலைக்கவே வங்கத்தை முன்னேபார்த்து
நேராக நிருத்தியே சத்திலேடே
பலிக்கவே சேர்த்தரைக்கப் பலனுமாகும்
பதிவாக நிரணயமாய்ப் பாரிலோர்க்கு
கலிக்கவே பத்திமுத்தி வைராக்கியங்கள்
கனிவாகப் பொருளறிந்து கணக்குங்கண்டு
தலிக்கவே அறிந்துநீ செய்துகொண்டால்
தங்கரச வாதமது தாக்கும்பாரே. (217)

## வாலைரசச் செந்தூரம்.

தாக்குமே வாலைரசச் செந்தூரத்தைத்
தடையறவே சொல்லுகிறே னுற்றுக்கேளு
பாக்குமே வெடியுப்புப் பலமும்பத்து
பதிவான சீனமது பலமுங்கேளு
காக்குமே பலமததா னிருபத்தைந்து
கனிவாக வொன்டுமொன்று பிடித்துநீயும்
வாக்கினுல் கலியத்தி லிட்டுவாலை
வைத்துமே அடுப்புதனில் வடிவுபாரே. (218)

வடிவாகத் தீயெரிக்க வெள்ளைநீராம்
வண்மைபெற வெள்ளையைத்தா னீக்கிப்போடு
நொடிதனிலே மஞ்சள்நீர் பிடித்துநீயும்
நொடிக்குள்ளே அரக்கென்ற குப்பிதன்னில்
படிவாக அடைத்துமே பின்புநீயும்
பதிவாகச்சூதமது பலமும்பத்து
குடிவாகப் பிங்கானில் விட்டுநீயுங்
குணமாகப் புகைநீரை விட்டுவையே. (219)

விட்டுவைத்து மூடியபின் காலுரெண்டு
விதமாகப் பார்த்திடவே சூதத்தானும்
கட்டுமே காளான்போற் பூத்துநிற்கும்
கனிவாகச் சூரியால் பூத்தபூவை
நட்டுமே யெடுத்துடனே லேறேபிங்கான்
நலமாக வைத்துமே புகைரூத்து
பட்டுமே பொருமியது பூச்சும்பாரு
பதிவாக உமிநெருப்பில் வருத்திடாயே. (220)

வருத்துமே காசிமேர் தனிலேவைத்து
வகையாகக் குப்பிக்கு அரையதாக
பருத்துமே பல்ப்பக்கல் மேலேயிட்டுப்
பதிவாகமண்ணேழு சீலைசெய்து
குருத்துமே சட்டிதனிற் சலங்கைமண்ணைக்
ணுமாகப் பாதியிட்டுக் குப்பிவைத்து
தருத்துமே அதின்பேரில் மணலேயிட்டுத்
தடையறவே அடுப்புதனி லேத்திடாயே. (221)

ஏத்தியே தீயதுமுன் னன்குசாமம்
இதமாக யெரித்துமே பிரித்துப்பாரு
நாத்திசையு மெய்க்கவே மஞ்சள்போலாம்
நல்லமஞ்சள் தனேயெடுத்துப் பிங்கானிட்டு
பாத்திபனர் மெய்க்கவே திராவகத்தைப்
பதியவிட்டு உமிநெருப்பில் வருத்துரீயும்
காத்திடவே முன்போலே குப்பிதன்னிற்
கனியவடை அடுப்பேத்தி யெரித்துக்கொள்ளே. (222)

கொள்ளவே யிப்படிக்குத் தரமுமஞ்சு
கூக்குரலா யெடுத்துமெள்ளப் பிரித்துப்பாரு
தள்ளவே செந்தூர மருணன்போலாம்
தானெடுத்துப் பலம்பத்து மிருத்துக்கல்வம்
வில்லாதே தங்கமது பலமுமொன்று
விதமான நாகமொன்று சேர்த்துருக்க
கள்ளமாய்ப் புட்டுப்போல் கொருங்கிப்போகும்
கைகண்ட படிதானுங்கண்டோரே. (223)

கண்டுமே கல்வத்தி லிட்டுத்தானும்
கனிவாக மூன்புகைநீர் விட்டுஆட்டி
தெண்டுபட உமிநெருப்பில் வருத்துப்போடு
தொல்லுலகிற் காசியென்ற மேருக்கிட்டு
பண்டுமே பனிரெண்டு சாமந்தீதான்
பக்குவமா யெரித்துமெள்ள வாங்கிநீயும்
கொண்டுமே நபிமாரைத் தொழுதுபோற்றிக்
குணமாகப் பிரித்துமே பார்த்திடாயே. (224)

பார்த்திடவே மூருக்கம்பூ போலாஞ்செம்பு
பதிவாக நவலோகம் நூற்றுக்கொன்று
ஏத்திடவே கொடுத்துருக்கிப் பார்க்கும்போது
இனமாக மாத்ததுவுஞ் சொல்லக்கேளு
சாத்திடவே மாத்ததுதான் பனிரெண்டாகும்
சஞ்சலங்க ளெல்லாமுந் தன்மையாகும்
சூத்திடவே குலமெல்லாம் வாழுங்கண்டீர்
குணமாக யாகோபு கூறினாரே. (225)

கூறினார் சகலசித்தும் விளங்கத்தானே
குணமான சகலநூ லெல்லாம்பார்த்து
ஊரிலே சோதித்துச் சரக்குங்கண்டு
உற்றுமே நபிபோலே பிறக்கவென்று
சாரியே வடநூலும் பார்த்துத்தேறி
சீரமது காயசித்தி பண்ணிநீயும்
பாரிலே பார்த்துநீ பகமையில்லாப்
பதிவாக யாகோபு பாலித்தாரே. (226)

பாலித்த பொருளறிந்து வாதிமார்கள்
பக்குவமாய்ச் செய்துமே பாலித்துத்தான்
கோலித்த நூல்பார்த்து வர்மங்கண்டு
குறிப்பாகச் செய்துமே குணமும்பார்ப்பார்
சாலித்து உத்தியென்று யிருப்பாரய்யா
சரிவரவே ஞானங்கள் மிகவுஞ்சொல்வார்
ஆலித்து நபிபதத்தை வணங்குவார்கள்
அம்மம்மா நபியோகம் ஆண்மையாமே. (227)

ஆண்மையாய்ப் புத்தியில்லா வாதிமார்கள்
அடைவான நூல்வர்மந் தெரியாதாலே
காண்மையாய்ச் சொல்லியே புலம்பிக்கத்தி
கைமுறைகள் தெரியாமற் சுட்டுக்கெட்டு
தாண்மையரம் பணமிருத்தால் சோத்துக்காகும்
தாக்கமா யாணுவத்தாற் கெட்டோமென்று
வாண்மையாய்ச் சொல்லியே வூதுவார்கள்
வகைகாணர் துகைகாணர் வழக்கமாமே. (228)

வழக்கமாய் ரசவாதி லோகவாதி
வடிவான நூல்வாதி மக்காதேசம்
கழக்கமாய்ப் பொருள்வாதி யேனவாதி
காட்டுமே வாதிதான் மூலிவாதி
பழக்கமாய் முட்டாளாய் வாதிதானும்
பதிவான குணங்கெட்ட வாதியோர்க்கு
தழக்கமாய் வாதந்தான் மிகவும் வேணும்
தொல்லுலகி லில்லாதாற் துன்பமாமே. (229)

துன்பமாய்ப் பொய்வாதி பொய்கள்சொல்லிச்
சுருதிதா னறியாமற் சுட்டுக்கெட்டு
இன்பரச வாதந்தான் பொய்யாமென்று
இடும்பாகச் சொல்லியே மனதுகொண்டு
அன்பாக வுலகமிதிற் சஞ்சரித்து
அடைவாக வேலைசெம்பு அலைவார்கோடி
தென்பாகக் கல்லார்கள் கோடிகோடி
தேசமெல்லா மிப்படிக்குக் கெட்டார்தானே. (230)

தானென்ற நூலறியா ரசட்டுவாதி
தாட்டிகமாய் வெள்ளியொடு தங்கஞ்செய்து
காணென்று உருக்கியே மட்டம்போட்டுக்
கனமாகக் கடைதனிலே காட்டிக்காட்டி
ஊனென்று போட்டபொன்போய் வீணுப்போச்சு
உதவாது வென்றுசொல்லி உறுதிபற்று
மானென்ற சோத்துக்கு யிடமில்லாமற்
பத்தியா யலைந்துமே மாண்டார்தானே. (231)

மரண்டுமே போகாமல் வங்கத்தன்னே
மாளமட்டு மரைத்துமே புடத்தைப்போட்டு
காண்டுமே சேர்த்தரைப்பாய் சத்தினேடு
காதலா யுருக்கூது செம்புதன்னே
வேண்டுபடி செம்பெடுத்து வெள்ளிதன்னில்
விதமாகப் பாய்ச்சிடுமீ மேன்மையாக
தாண்டுமே நவலோகம் மேட்டியோடும்
தாக்கிடவே பணமாகும் தாக்கிப்பாரே. (232)

## சிங்கித்தைலம்.

தாக்கிப்பார் கொடுஞ்சிங்கித் தயிலஞ்சொல்வேன்
தடையறவே வாலுளுவை புரசவெட்டி
காக்கியே கஞ்சாவும் புங்குஅத்தி
கனமான அலுஞ்சிபுன்னே வாழமோடு
பாக்கியே வேம்புநீர் வெட்டிமூத்து
பதிவாகக் கழுதைமுன்னி விரைபையெல்லாம்
வாக்கியே வகைவகைக்குப் படியேயொன்று
உண்மையா யளந்துமே பொடித்திடாயே. (233)

பொடித்துமே கெருடனுட கிழங்குச்சாற்றில்
போக ஊரவதைத் திரிநாள்வைத்து
காட்டுமே கல்வத்தி லிட்டு ஆட்டு
கனிவாக அதிற்போட மருந்துதன்னே
காட்டுமே மருந்தினைத்தான் சொல்வேனப்பா
நலமான அரிதாரஞ் சிலியுங்கெந்தி
கூட்டுமே வெடியுப்புச் சினஞ்சூடன்
குலமாகச் சாம்பிராணி சாதங்கூட்டே. (234)

சாரமுடன் வீரமொடு பூனீர்தானுஞ்
சரியான குங்கிலியம் தருபோடு
பாரமொடு அன்னமென்ற பேதிதானும்
பதிவாக வகைக்கிரண்டு பலந்தான்ரெண்டு
சாரமொடு மூன்மருந்தோ டொக்கச்சேர்த்துக்
கனிவாகக் கலந்தரைக்கக் கணக்குக்கேளு
வாரமொடு கெருடனுட கிழங்குச் சாற்றுல்
வார்த்தரைத்து பெட்டுகொள் மெழுகுபோலே
சோமதாப்த் தட்டியே உலரப்போடு
கொடுமைபாய்ப் பூப்புடத்திற் தயிலம்வாங்கே (235)

வாங்கியே பாணிதனி லடைத்துக்கொண்டு
வடிவாக பின்னமுமே மருந்துகேளு
தாங்கியே தருசுவெள்ளை பலமுமொன்று
தப்பாமல் நிருத்துமே தயிலந்தன்னில்
ஏங்கியே பிசரியே வைத்துநீயும்
இதமாக லிங்கத்திற் சுருக்குத்தாக்கு
பாங்கியே மெழுகாகும் மெழுகெடுத்துப்
பதிவாக நவலோகந் தன்னிலீயே. (236)

தன்னிலிட்டு பெடுத்துப்பார் மாத்துமங்கே
தனியான பத்தரைதா ணியுண்டோ
உன்னியே திரியாதே தயிலந்தன்னே
உறுதிபெறத் தனித்ததொரு மட்டந்தன்னில்
கெண்ணியமாய்ப் பூசியே புடந்தாண்போடக்
கெடியாகப் புடம்போட்டு பெடுத்துப்பாரு
பண்ணியே புடமிட்டுப் புடத்துக்குத்தான்
பரிவாக மாத்துத்தா னுயருந்தானே. (237)

உயருமே விப்படிக்கு மட்டந்தன்னே
உயர்த்தியே வித்துத்தான் செலவுசெய்து
நயந்துமே கந்திரிக ளாக்கித்தானும்
கலமாகக் கொடுத்துமே பின்னுங்கேளு
பயமில்லா அயச்செம்பு வைத்துத்தேரு
பதியவே செந்தூரம் பண்ணியுண்ணு
தயருமேமேனியது பிரும்புத்தாணும்
தாட்டிகமா யாகோபு பகர்ந்தார்தானே. (238)

தானென்ற கொடுஞ்சிங்கித் தயிலத்தாலே
சகலமுந்தான் சித்தியாம் சபிமார்சொல்வார்
கோனென்ற சத்துவகை கோடாகோடி
கொடுப்பினமும் பழுப்பினமு மதிலுங்கோடி
வானென்ற கட்டினமோ அதிலுங்கோடி
வகைகோடி தகைகோடி வழக்கங்கோடி
பானென்ற பத்தியது கோடாகோடி
பாலித்தோ ரதிலும்வெகு கோடிதானே. (239)

கோடிதா னென்ருக்காற் சொல்லக்கேளு
குணமான வாதத்தில் கருத்துப்பூண்டு
நீடியே செய்தாக்காற் பலனுமாகும்
நிலையாகும் அலைச்சலில்லா நேர்மையுண்டு
பாடியே திரிந்தினும் பலிதமில்லை
பக்குவமாய்ச் செய்தாக்காற் பத்திமுத்தி
மூடியே சொல்லாதே முடிவுபாரு
முத்திநூல் பார்த்தாக்கால் முதலுமாமே. (240)

முதலாகச் சொல்லவென்றால் வங்கந்தன்னை
முடியவே உழைத்துமே பார்த்தால்நன்றும்
வதலாகச் சுட்டபணங் கொடுக்கும்பாரு
வடிவான வங்கத்தைக் காணுமாந்தார்
விதமாகச் சுட்டலந்து கெட்டுப்போவார்
வீரியமாய்ச் சொல்வார்கள் விதமுமில்லை
ஈதினிலே மூழ்கியே அலைவார்போல
நாடியே நூலறியார் வாதிதானே. (241)

வாதிதா னென்றுசொல்லி வாய்ப்பேச்சாலே
வகையாகப் பசப்புவார் வங்கத்திற்றான்
நீதிபோற் சொல்வார்கள் அவனைநம்பி
நெட்டோர் தனையெடுப்பார் நூலைச்சொல்வார்
பாதியாய் வாதந்தான் வந்ததென்பான்
படிப்படியா யேறுகிற தரையைக்காணார்
சாதிதான் கெட்டவன்போற் பேசுவார்கள்
சரியான பொருளறியார் சவுங்கல்தானே. (242)

சவுங்கல்தான் மெத்தவுண்டு வுயுத்தமாண்பர்
சரியாகச்சொல்வார்கள் பொருளுங்காணார்
நவுங்கலா யுலகத்திற் பொய்கள்சொல்லி
நாட்டியே நான்வாதஞ் செய்வேனென்று
தவம்பெறவே யவன்வீட்டிற் சோத்தையுண்டு
தாகமாய்ப் பொருளெல்லாம் பிடுங்கிவீட்டில்
கவலிகொண்ட மனிதன்போற் கக்கிக்கக்கி
கவலையாய்ப் பேசியே கருதுவானே. (243)

கருதுவா ருலகத்திற் படியாமாந்தர்
கவலையாய் மிகப்பேசிச் சண்டைகொண்டு
அருதலிபோல் நித்தம்நித்த மழுவான்பாரு
அருத்ததொரு பலாச்சுளையில் ஈயைக்காணு
ஒருவனவன் விட்டதுண்டோ சொல்லிடுங்கள்
உலுத்தரச வாதிபவன் சொல்வானப்பா
பருகுனது பாற்குடித்த வாரதொக்கும்
பத்திதா நிசமில்லார் பருவமாமே. (244)

பருவமாஞ் சாக்குகளைச் சுட்டுக்கெட்டுப்
பாதைதெரியாமலே பலருஞ்சொல்வார்
உருவமாய் வகையறியார் பொன்னைக்காணார்
உலுத்தரச வாதிதா ஞமோட்டு
கருவமா யென்னைப்போல் கெட்டாயென்று
கணக்காகச் சொல்லியே புலம்பியேங்கி
தருவமா யுலகத்திற் பேசுவார்கள்
சண்டாளர் பொய்சொல்லும் வாதிதானே. (245)

தானென்ற பொய்சொல்லும் வாதிக்குத்தான்
தாட்டிகமாய்ப் படிமண்ணை வாயிற்போட்டு
கானென்ற கள்குடிக்கும் வாதிபேச்சைக்
கருத்திலே பெண்ணுதே சண்டுகொள்ளு
பானென்ற கஞ்சாவை யுண்டுபின்னும்
பத்தியாய்ச் சாராய மிகவேயுண்ணும்
நானென்ற ஆணுவங்கள் மிகவேபேசி
நாடினவர்க் கொன்று மேபேசிடாதே (246)

பேசிட்டா லவர்களைத்தா னடிக்கவேண்டாம்
புறம்பாக அப்பாலே தள்ளிப்போடு
வீசிட்டால் நபிமார்கள் குற்றம்சொல்வார்
விதமாகப் பாவம்வரும் வாதமில்லை
நேசித்து யெல்லோர்க்கும் நண்மையாக
நிலையாக யிருந்தாலோ ஒருவர்வந்து
வாசித்து நாட்டிலே யவர்தான்சொல்வார்
வடிவாக அப்போது அறிந்துகொள்ளே. (247)

அறிந்துமே சாராயம் குடிக்கும்பேர்கள்
அடைவாக அபினியொடு கள்ளுதானும்
தெறிந்துமே யிவர்களுட விஷ்டம்வேண்டாம்
நிலையாக வாப்பப்பேச்சுச் சொல்லிடியும்
கறிந்துமே யவரவர்கள் பனதைச்சோதி
கணமாக வுண்மனதிற் கவனம்வைத்து
செறிந்துமே நீசெய்தாற் பலனுமாகும்
சிறப்பான பொருளாகுஞ் செல்வமாமே. (248)

செல்வமாம் வங்கமென்ற சுண்ணம்வைத்தால்
செழிப்பாகும் உலகத்தில் நீதிமார்க்கம்
மல்கவே வங்கத்தை யார்தான்காண்பார்
வையகத்தில் நபிமார்கள் தானுங்காண்பார்
உல்கவே வங்கத்தைக் காணுமூடர்
உலுத்தருக்கு ஒப்பாகும் உறுதிமெத்த
தல்கவே பொருளறியார் பொருளிருத்தால்
துடியாகச் செலவுசெய்வார் சூட்சம்தானே. (249)

சூட்சமாம் புளியுப்பு மார்க்கங்கண்டால்
சுகமாகச் சொர்ணமாம் சத்தோயில்லை
வாச்சபடி. அவரவர்கள் நினைத்துத்தானும்
வகையாகக் கோடான கோடிசுட்டு
தாச்சியாய்ச் சொன்னக்கா லென்னசெய்வோம்
தாட்டிகமாய்க் ளகபாக வரிசையாலே
பாய்ச்சினுல் நவலோகம் பழுத்துப்போகும்
பாடுபட்டாற் பெலனுகும் பரிவுதானே. (250)

பரிவாகப் பொருளறிந்தோன் சித்தன்சித்தன்
பலனறிந்தோ னதிலும்வெகு நிபுணனுகும்
விரிவாக வெல்லோர்க்கும் சொன்னர்கர்த்தன்
வித்யாச மறியாதான் மாடுமேய்க்கி
கரிபோலக் கண்டதுதான் ஜூனியாகும்
கணக்கிட்டோன் பிள்ளையாம் கண்டுகொள்ளு
பிரிவாகப் பிரிமுறுக்கும் பேர்கள்கூலி
பேசரிது யெளியோர்கள் பேசலாமே. (251)

பேசவே மிகவுந்தான் ஆசையில்லார்
பேசரிய நூல்பார்த்தோர் கைபாகங்கள்
நாசவே அறிந்தவர்க்கு வாதமெய்தும்
ஞானிலத்திற் திமிரூகச் சொல்லுவோர்க்கு
கூசவே வாதமில்லை யென்போர்தானும்
குணமாக நினைத்துமே கொள்ளுநீயும்
பாசமற ஆசைதனைப் போக்கித்தானும்
பக்குவாம் வாதமுண்டு பரிவுதானே. (252)

பரிவாக அபத்தினுட செம்பைக்கேளு
பகரரிய ரோமத்தை எண்ணெய்தோய்த்து
விரிவாக அபச்சட்டிக் குள்ளேயிட்டு
விதமாக மூன்றுபத்துப் பலத்தையிட்டு
கரியான தருசதுவும் பலமோபத்து
கைமுறையாய் தரிசுதனைப் பிரட்டிவாங்கி
திரிவாக நாற்றமது பலமும்யேழு
திறமான அரபொடியும் பலமும்ரெண்டே. (253)

## அயச்செம்பு.

ரெண்டோடு யிதுவெல்லாங் கரண்டியிட்டு
ரோரான யெள்ளெண்ணெய் கொஞ்சங்குத்தி
பண்டோடி கொதிக்கவைத்துக் குகையிலிட்டு
பதிவாக உருக்கிடவே சத்துமாகும்
மூண்டோடு வெங்காரங் கொஞ்சமிட்டு
முடிவாகச் சத்ததனை உருக்கித்தீரு
தண்டோடு வெள்ளிவெங் கலம்போலாகும்
தடையறவே பலம்பத்து நிருத்திக்கொள்ளே. (254)

லைத்துமே பின்புதான் வங்கம்கன்னூய்
வளமாக உருக்கியே கன்னிப்பாலில்
சித்துமே தரமேழு சாய்த்துக்கொண்டு
சிறப்பாகக் கரண்டிதனில் வைத்துருக்கி
முத்திபெற விஷ்ணுவின் கரந்தைதானும்
முடிவாக யிடைசமன் தூள் பண்ணிக்கொண்டு
சித்திபமாய் வங்கமதின் மேலேயிட்டு
நிலையாகச் சரமம்நால் வருத்திடாயே. (255)

வருத்திடவே மாப்போலே யாகும்பாரு
வளமாகக் கன்னிப்பால் தண்ணூலாட்டி
மருத்துமே கதிரில்வைத்துக் காயப்போடி
மயமாகப் பெரியபுடம் போட்டெடுத்து
சிருத்துமே மூன்சத்து விடையேசேர்த்துச்
செயமாக விருசாம மரைத்துப்பின்பு
பருத்தமே பெரியபுடம் போட்டெடுத்துப்
பதிவாகக் குகையிலிட்டு உருக்கிடாயே. (256)

உருத்திடவே யீயம்போ லுருகிநிற்கும்
உத்துமே யெடுத்துபஞ்ச மித்திரத்தில்
பருத்திடவே யுருக்கிச்சாய் கசயிபோகும்
பதிவாக வெடுத்தடிக்க வெட்டையாகும்
கருத்திடவே மதியெட்டில் வெட்டைரெண்டு
நலமாகச் சேர்த்தூதி பொன்னைச்சேர்த்து
பெருக்கவே ஊதியெடு மாத்துயேழு
பெலமான நபிமார்க ளாடுமோட்டே. (257)

ஆட்டான நபிமாரைத் தொழுதும்பாற்றி
ஆதியோடந்தமாய் நூலைப்பார்த்து
வாட்டான சரக்கெல்லாம் வகைகள்கண்டே
வடிவான பொருளறிந்து மார்க்கமாக
தேட்டான தேட்டதுபோல் வாதமார்க்கம்
திடமாகச் செய்தாக்காற் பலனுமாகும்
மூட்டான மூட்டிதைத்தா னறிந்தஞானி
முனிவான செம்பெடுப்பார் முனிந்துகாணே. (258)

முனிந்துபார் பெண்ணுடைய சாஸ்திரந்தான்
முடிவான அட்டவணை வரிசைகேளு
கனிந்துபார் வைத்தியந்தான் பெழுதூறுசொச்சம்
கனிவாகப் பஞ்சமித் திரமுன்னூறு
னனிந்துபார் களங்கம்பொண்டு காண்டந்தானும்
நலமாக அறுநூறும் நாடிச்சொன்னேன்
பணிந்துமே சூருக்கம்தூற் றுன்பத்தைந்து
பதிவாக அதைக்குருக்கிச் சூஸ்திரத்தானே. (259)

சூல்திரந்தான் பதினாறு அதைக்குருக்கிச்
சருதிபெற வெட்டொன்று சொன்னைப்பா
பத்திரமாய்ச் சுண்ணமென்ற காண்டந்தானும்
பதிவாக அறுநாறு அதைக்குருக்கி
காத்திரமாய்ச் சுண்ணமுன் னூறுபாடிக்
கனிவாக பிதைக்குருக்கி நூற்றன்பத்தைந்தாய்
வத்தியே பாடினேன் தண்டகந்தான்
இதமாக நூருகப் பாடினேனே. (260)

பாடினேன் பேழையாம் வாதிக்குத்தான்
பதிவாக பென்னூலே பெல்லாம்பார்த்து
கூடியே கருத்தவைத்துப் படித்துப்பார்த்துக்
குணமாக ஒருமனதாய் ஒக்கப்பண்ணி
நீடியே முன்னேதான் வங்கஞ்செய்து
நிலைத்துமே சத்ததனிற் செம்பெடுத்து
வாட்டியே மதிதனிலே தாக்கிப்பின்பு
வகையாக உண்டிநீ மார்க்கங்கேளே. (261)

மார்க்கமாய்ப் பின்னேதான் செந்தூரத்தை
வடிவாகச் செய்துமே வித்தநீயும்
வர்க்கமே செலவுக்கு வைத்துக்கொண்டு
இனிதான செந்தூரம் தானுமுண்ணு
பார்க்குள்ளே காயசித்திபண்ணிநீயும்
பதிவாக பேழைக்குச் சொஞ்சமீய்ந்து
மூர்க்கமாய்த் திரியாதே மூடிவுகண்டு
முத்திபெற சிவமாரை வணங்குவாயே. (262)

வணங்கவே தன்னேத்தான் வணங்கிநீயும்
வகையாக மேற்கேநீ மனதுவைத்து
இணங்கியே கால்மடித்துத் தொழுதகையை
இனிதாகக் கண்தனிலே ஒத்திநீயும்
குணங்காமற் குப்பாத்தான் படித்தெழுந்து
கூரியே சேவித்துக் குணமதாக
கனமாக ஓதிடுநீ ஆண்டவன்தான்
கருத்துறவே வாதங்கள் சொல்லுவாரே. (263)

சொல்லுவா ரலரவர்க்குத் தக்கதாகச்
சுருதிமுறை தெரியவே செய்துவைப்பார்
மெல்லுவார் சகலசம் பத்துதானும்
மென்மேலுங் சொடுத்திடுவார் மேகம்போல
நல்லுவார் மகம்மதுதான் முன்னேவந்து
நாடியே சொல்லிடுவார் நாட்டிலோர்க்கு
வெல்லுவார் தொட்டதெல்லாஞ் சித்தியாக
வேடிக்கை யாகவே திரியலாமே. (264)

திரியவே அண்டாண்ட பதங்களெல்லாஞ்
சித்திக்க வேணுமென்று சத்துப்பாரு
அரியவே வங்கத்தை அனைத்தும்பாரு
அதின்பின்பு செந்தூரஞ் செய்துபாரு
பிரியமா யதின்பின்பு சுண்ணம்பாரு
பிரட்டில்லே வாதசித்தி வந்துகூடும்
விரிவாகப் பேசாதே சூஞ்திரத்தை
வினையமாய்ப் பார்த்திடவே சித்தியாமே. (265)

சித்தியா மாருக்கு ரூபிமாருக்குச்
சதமெய்க்கும் புத்தியுள்ளோர் தீர்க்கவானும்
பத்தியாய் வாதத்தைப் பார்த்தவர்க்குப்
பதிவான உறுதியுள்ளோர் தங்களுக்கு
நித்தியமாய் நூல்பார்த்த வாதிக்குத்தான்
நேரான செம்பநித்து நிலைத்தபேர்க்கு
மூத்தவரு மென்றுசொன்னர் யாகோபுதானும்
மூர்க்கமாய் வாதசித்தி யெய்துந்தானே. (266)

## திராசெந்தூரம்.

தானென்ற யின்னமொரு திராவின்மார்க்கம்
தடையறவே சொல்லுகிறேன் தன்மையாக
ஊனென்ற திராவதுதான் பலமும்பத்து
உருதிபெறக் காண்டிதனில் வைத்திருக்கி
சானென்ற யிடைக்குமஞ்சி லையைத்தாக்கு
கணக்காக உடையுமது கருதக்கேளு
தானென்று திரியாதே கல்வத்திட்டு
நலமான புனைரோற்ச ராமமாட்டே. (267)

ஆட்டியே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
அடைவாகப் பெரியபுடம் போட்டுவாங்கி
நீட்டியே கல்வமிட்டுப் பின்புநீயும்
நிலையாக ரசபதங்கம் பாதிசேர்த்து
கூட்டியே புகைநீரா லரைகால்சாமம்
குணமாக வில்லைகட்டிக் கதிரில்வைத்து
தாட்டிகமாய் மேற்கவசம் சொல்லக்கேளு
தடையில்லா வுப்போடு சுண்ணந்தானே. (268)

தானேதான் ரெண்டுமுறை வில்லைமேலே
தாட்டிகமாய்க் கட்டியே உலரவைத்து
வானேதான் குக்குடமாய் போட்டெடுக்க
வடிவாகப் பார்த்திடவே செந்தூரமாகும்
வானேதான் மதிதனிலே பத்துரெண்டு
உறுதியாய்ச் சேர்த்துருக்கித் தங்கமொன்று
கானேதா னூதிடவே மாத்திக்கேளு
கனிவான வபதேழு காணுந்தானே. (269)

காணுமே செந்தூரங் குன்றியுண்ண
கருதியே சரம்பிறகு மேனிதானும்
வேணுமே விந்திறகுந் தேகந்தானும்
விதமாகக் கற்போலே யிறுகும்பாரு
வாணுமே போர்ப்பெலனு மதிகமாகும்
வடிவான செவ்வலரி போலேகண்கள்
தோணுமே யிருட்டரையில் கண்துலங்கும்
சருதிபெற யாகோபு சோதித்தானே. (270)

சோதித்தேன் நரைதிரைக ளத்துப்போகும்
கருக்காக வாலிபோல்த் தேகமாகும்
வாதித்த பெண்ணுடே சேலாகா
வடிவான காயமது யிறுகிப்போகும்
நீதியாய்க் குதிரைபோல் வேகமுண்டு
நிலத்தநபி மார்போலே யிருக்கலாகும்
சாதிபல பேதத்தைத் தள்ளிப்போடி
சதாரித்தம் ஆண்டவரைத் தொழுதிடாயே. (271)

தொழுதிடவே வாதசித்தி உடனேயாகும்
தொல்லுலகில் ரசவாத மேவல்சேட்கும்
பழுதில்லா நோயெல்லாந் தவிடுபொடியாகும்
பாதையிதில் சொம்பவுண்டு பத்தியாகும்
உழுதுபயி ரிட்டதுபோல் பலன்கொடுக்கும்
உற்றுமே செல்வம்வரு முலகத்தோர்க்கு
அழுதுமே திரிந்தாலே யென்னலாபம்
ஆதியாம் வெடியுப்பை யண்டிப்பாரே. (272)

## பித்தளைச் செந்தூரம்.

அண்டவே ஊர்கூட மார்க்கஞ்சொல்வேன்
ஆண்மையாய்ச் சொல்லுமேனறிந்துபாரு
பண்டிடவே பித்தளைதான் பலமும்பெட்டு
பதிவாக பிலுப்பைநெய்யி லுருக்கிச்சாய்த்து
கண்டிடவே பத்துதரம் சாய்த்துக்கொண்டு
கசடகற்றி யெடுத்துமே குகையிலிட்டு
தொண்டுசெய்வார் போலவே தாளகத்தைச்
சுண்ணும்பில் வைத்தெரிக்கச் சூட்சமாமே. (273)

எரித்துமே யிருசாமங் கடந்தபின்பு
ஏழைமதி போகாம லெடுத்துநீயும்
வரித்துமே முன்சுத்தி செய்துவைத்த
வடிவான பித்தளையைக் குகையிலிட்டு
பிரித்துமே உருக்குமூகந் தன்னிலேதான்
பிலமாக பிடைசமனுய்த் தாளகத்தை
பிரித்துக்கொடு உள்வாங்கி உடையும்நன்றாய்
பேர்பெருக வெடுத்துநீ பின்புகேளே. (274)

பின்புதா னெடுத்துமே சொல்லக்கேளு
பேசரிய கல்வத்திலிட்டுநீயும்
தென்பாக ரசபதங்க மிடையேசேர்த்துத்
திறமான புகைநீரால் சாமமாட்டி
தன்பாக வில்லைகட்டிக் கதிரில்வைத்து
தடையறவே சுவசமதைச் சாற்றக்கேளு
வன்பாக அரைபொடிதான் பலமும்பத்து
வகையான வெண்காரம் பலமும்பத்தே. (275)

பத்தாக மிதுரெண்டுங் கல்வத்திட்டுப்
பழச்சாற்றுல் சாமந்தா னரைத்துமேயும்
முத்தாகக் குளையிலிட்டு உருக்கிப்பாரு
முனிவான நரிபோலே உருகிநிற்கும்
சித்தாக வதையரைத்துப் பழச்சாற்றுலே
சிறப்பாக வில்லைதட்டிக் கவசமிட்டு
நத்தியே காயவைத்துச் சேவலென்ற
நாடியே புடமிடவே கன்மையாமே. (276)

கன்மையாய்ப் புடமிட்டு யெடுத்துப்பாரு
கலமாகச் சென்தூர முருக்கம்பூவாம்
வண்மையாய் மதியெட்டில் ரெண்டுசேரு
வளமாகத் தங்கமொன்று சேர்த்துருக்கி
பண்மையா யூதியெடு பச்சையாகும்
பரிவாகத் தங்கமாம் பரிவுமெத்த
உண்மையா யிருக்குமந்தத் தங்கந்தன்னை
உலகறிய வித்துமே செலவுசெய்யே. (277)

செய்யவே யிச்சொத்தை வருமையாக
சிறப்பாக உண்டிட்டுச் சென்தூரத்தை
பய்யவே வைத்துமே உண்டுதேறு
பத்தியமாய்ப் பாகமாய் உண்டுதேறு
கய்யவே கபிமாலை வணங்கியேத்தி
காலிலத்தி லிருந்துமே தருமஞ்செய்து
கைபாக மாகவே செய்துகொள்ளு
கனிவாக விதியாளி காணுவானே. (278)

காணுவான் புத்தியுள்ள வாதிதானும்
கடைகெட்ட வாதிதான் காணமாட்டான்
பேணுவான் பொய்சொல்லா னிலைத்தவாதி
போக்கோடே பொய்சொல்வோர்க் கில்லையில்லை
தாணுவா யிலேவோர்க்கு யில்லையில்லை
தடையின்றிச் சொல்வோர்க்கு மெய்திடாது
பூணுவார் ஆசையுள்ள வாதிக்குத்தான்
புகலிய வாதமில்லை பேசினேனே. (279)

பேசினேன் கடைசிதனில் செந்தூரத்தைப்
பிரியமாய்ப் போக்கோடே வைத்துநல்ல
வாசினையாய்க் கைபாக வரிசையாக
வைத்துமே செய்தாக்கால் சித்தியுண்டு
காசினையாய் அவசரத்தில் செய்வாயானில்
கணக்கான சித்தியில்லை கண்டுகொள்ளு
பாசிதரன் நீர்தனிலே மூடினைப்போல்
பாவிக்கும் அவசரத்தின் பதிவுதானே. (280)

சாரக்கட்டு,

பதிவாக பின்னுமொரு சாரக்கட்டு
பதியவே சொல்லுகிறேன் பக்தியாக
நிதியான சாரமது பலமும்காண
நிலையாக அண்டம்போற் சீவிக்கொள்ளு
முதியான வெள்ளீயம் சட்டியிட்டு
முனிந்துமே அண்டோடு யிடையேயிட்டு
விதியாகக் கிண்டிடவே கரிபோல்நிற்கும்
வினயமாய்க் கல்வத்தி லிட்டுக்கேளே. (281)

இட்டுமே வெண்கருவாற் சாமமாட்டி
இதமாக வில்லைதட்டிக் கதிரில்வைத்து
கட்டுமே உலையில்வைத்து ஊதித்தீரு
கலமான கடுஞ்சுண்ண மாகும்பாரு
பட்டுமே கல்வத்தி லிட்டுநீயும்
பதியவே வெண்கருவா லரைத்துவில்லை
கட்டுமே கதிரில்வைத்து ஊதித்தீரு
கடுவங்கச் சுண்ணமது வாகும்பாரே. (282)

ஆகுமே முன்சாரக் கட்டிமேலே
அடைவாக அரைத்துமே கருவாற்பூசு
காகுமே பெரும்பூச்சாய்ப் பூசெல்ல
கலமாகக் கதிரில்வைத்துப் பின்புமேலு
ஏகுமே ஒருசட்டி தன்னிலேதான்
இதமாகக் கிளிஞ்சிலென்ற சுண்ணந்தானும்
பாகுபெறப் படிரெண்டு அளந்துவிட்டுப்
பக்குவமா யதன்மேலே உண்டைவையே. (283)

உண்டைவைத்து அதன்மேலே கிளிஞ்சில்நீரு
உறுதிபெறப் பரப்பியே அமிழ்த்திநீயும்
பண்டைமுன்போல் அடுப்புதனி லேத்திமூடிப்
பதிவாகச் சிறுகயெரி தீமட்டாக
கண்டைபோ லிருசாம மெரித்துவாங்கு
கனிவாக யெரிபிரித்துப் பார்த்தாயும்
வண்டமாய்க் கவசமது பிரித்துப்பாரு
வடிவாக உருகியது கட்டுந்தானே. (284)

## நாகக்கட்டுச் செந்தூரம்.

கட்டுமே ஆனையுட தந்தம்போலே
கனிவாக வெடுத்துமே அப்பால்வைத்து
கட்டுமே நாகமது பலந்தானொன்று
நாடியே இதுப்பெண்ணெய் தனிலுருக்கி
மூட்டுமே மூவேழு தாமுஞ்சாய்க்க
முடிவாகக் கசடகலும் மூனிந்துபாரு
செட்டுமே குகையிலிட்டு உருக்கிநீயும்
சீரான சாரத்தை முகத்தில்தூவே. (285)

தூவவே நாகமது கண்விட்டாடும்
துடியான புகைதானு மடங்கிநிற்கும்
காவவே நாகமது கரியில்நின்று
கண்விட்டு ஆடிவிடும் நாகந்தானும்
பாவவே கட்டினதோர் நாகந்தானும்
பதிவாகப் பலம்நாலு குகையிலிட்டு
தாவவே உருக்குமுகந் தன்னிற்கேளு
தாட்டிகமாய்த் தங்கமது பலமும்நாலே. (286)

பலம்நாலு செண்டுமொன்று யுருக்கிநீயும்
பாருபெறக் கல்வத்தி லுடைத்துக்கேளு
கலாகக் கெந்தியது பலமும்நாலு
கணக்காகச் சூதமது பலமும்நாலு
தலமாகப் புகைநீரா லரைத்துச்சாமம்
தான்வழித்துக் காடியென்ற மேருக்கிட்டு
உலமாகப் பனிரெண்டு சாமந்தீதான்
உறுதியா யெரியிட்டுப் பின்புவாங்கே. (287)

வாங்கியே புகைதூபம் பின்புவிட்டு
வடிவாக அதைவறுத்துச் சொல்லக்கேளு
தூங்கியே திரியாமல் மேருக்கிட்டு
துடியாகப் பன்னிரண்டு சாமந்தான்
பாங்கியே யெரியிட்டு உடைத்துப்பாரு
பதிவாகச் செந்தூர முருக்கம்பூவாம்
தாங்கியே நபிமாரைத் தொழுதுபோற்றித்
தாக்கிடவே நவலோகம் தூற்றுக்கொன்றே. (288)

ஒன்றுகத் தொழுதிடவே மாத்துக்கேளு
உறுகிபாய்ப் பதினாறு மாற்றுக்காணும்
கன்றுக வித்துமே செலவுசெய்து
கந்திரிக ளாக்கியே சோறுதன்னே
பன்றுகக் எல்லோருக்கும் கொடுத்துப்பின்பு
பதிவாகத் தொழுதுநீ பாரிலேதான்
நன்றுகப் பள்ளிவாசலைத் தான்கட்டி
நாடியே நபிமார்போ லிருந்துவாழே. (289)

இருந்துமே செந்தூரங் குன்றியுண்ண
இதமாக மண்டலத்திற் காயசித்தி
பருந்துமே லோகசித்தி கூடனத்தில்சித்தி
பதிவாக நரைதிரைக ளற்றுப்போகும்
வருந்தியே திரியாமற் சித்திமெத்த
வடிவான நாகசெந் தூரந்தன்னே
நருந்துமே நாடியே வைத்துநீயும்
நலமாக வுண்டுபார் நாட்டிலோரே. (290)

நாட்டிலே உண்டிடவே நரைகள்போகும்
நாடியே விந்திறுகும் மேனிதங்கம்
பாட்டிலே சொன்னதுபோல் வைத்துநீயும்
பதிவாக உண்டிடவே பலனுமாகும்
ஏட்டிலே பெழுதிவைத்த படியேசெய்து
இதமாகப் பாகமது உறுதியாக
கூட்டியே செய்துபார் குணமதாகும்
கூடியொரு காரியத்தைச் செய்துபாரே. (291)

செய்திடவே நாகத்தின் வர்ணம்போலச்
சிறப்பாகக் கண்டதொரு கனியுமாகும்
மெய்திடவே சனபேதி சத்தபேதி
வெற்றிபெறப் பொருளாகும் செய்துபாரு
வைதிடவே வர்ணங்கள் ரெம்பவுண்டு
வாதாடிச் சண்டைகொண்டு வழச்குச்செய்து
நைதிடவே பாகமாய்ச் செய்துநீயும்
நாடியே யிருந்துநீ வாழ்வாய்காணே. (292)

வாழவே நாகசெந் தூரந்தன்னே
வைத்துமே சீவனங்கள் மிகவேசெய்து
நாழவே கன்னியா குமரிக்குத்தான்
நாடியே ஒத்தாசை மிகவுஞ்செய்து
பாழவே சுண்ணங்கள் மிகவுஞ்செய்து
பதியாச மாகவே யிருந்துநீயும்
காழவே உலகத்திற் கனிந்துவாழு
கனிவாகப் பொருளறிந்தால் கணக்குமாமே. (293)

கணக்காக மெய்யறிந்த வாதிதானும்
கருதியே பொருளறிவான் கண்டுகொள்வான்
தனக்காகத் துபரமில்லை பொருளைக்காண்பான்
தாட்டிகவான் வாதங்கள் பண்ணிப்பார்ப்பான்
உனக்காக ஒருவரிடஞ் சொல்லமாட்டார்
உறுதியாய்ப் பேசுவார் உற்றுப்பாரார்
குணக்குத்தான் வாராமற் பேசுவார்கள்
குடிகெடுப்பு மில்லார்கள் குணமுமாமே. (294)

குணமாக நபிமார்தைத் தொழுதுபோற்றிக்
குண்டலியைத் தான்சைத்துத் தொழுவாரப்பா
பணமாக செம்பவுந்தான் செய்வாரப்பா
பத்திமுத்தி வயிரமா யிருப்பாரப்பா
அணமாகச் சைதன்ய யோகஞ்செய்வார்
தொல்லுலகில் ரசவாதத் தொழிலுஞ்செய்வார்
உணவாக நம்பியே செய்வாரப்பா
உத்தமெள்ளச் செம்பைத்தா னெடுப்பார்பாரே. (295)

எடுப்பார்க ளறிவுள்ள காயன்மார்கள்
இதமாகப் பொய்சொல்லார் நிலைத்தவாதி
அடுப்பார்கள் கெவுனசித்து ஆடுவார்கள்
ஆண்மைதிமிர் கெம்பவுண்டு அன்புபெற்று
படிப்பார்கள் பலகலைநூல் பக்திமிக்க
பரிவுடனே நிலையாக பக்திசெய்வார்
கொடுப்பார்கள் ரசவாதத் தொழிலைச்செய்வார்
குற்றமற விருப்பார்கள் கூடுவாரே. (296)

கூடுவார் வெகுபேர்கள் நபிமார்தானும்
கூக்குரலாய்ப் பேசார்கள் வாதந்தன்னைத்
தேடுவார் மவுனமா யிருந்துகொண்டு
திடமாக நூலைத்தான் வசனிப்பார்கள்
பாடுவார் வசனத்தைக் கேட்டுக்கேட்டு
பத்தியுடன் சரக்கைத்தான் சோதிப்பார்கள்
நாடுவார் செந்தூர மிகவுஞ்செய்வார்
நானிலத்தி லவர்பேரு விளங்கத்தானே. (297)

விளங்கவே மக்காவின் தேசந்தன்னில்
விடுபட்ட நபிமார்கள் கோடாகோடி
அளம்பவே பொன்செய்வார் வெள்ளிசெய்வார்
அடைவாக அபச்செம்பை யெடுப்பாரப்பா
களம்புகுவார் பூனீறு மிகவெடுப்பார்
காரியமாய்ச் சவுக்காரஞ் செய்வார்பாரு
தளம்பவே துருசதுவை நீற்றுவார்கள்
தாளகத்தை நீத்தியே தாக்குவாரே. (298)

தாக்கியே வெடியுப்புச் சுண்ணஞ்செய்வார்
சரியாகச் சரக்கெல்லாங் கட்டிநீத்தி
பாக்கியமாய் நவலோகந் தன்னையெல்லாம்
பதிவாகப் பழுக்கவைப்பார் பக்திமுக்தி
கோக்கியே தொழுவார்கள் நுணுக்கம்பார்ப்பார்
கொடிக்குள்ளே சகலமெல்லாஞ் சித்திசெய்வார்
ஆக்கியே கெவுனத்தில் பறப்பாரப்பா
அடியான நபிமாரை வணங்குவாரே. (299)

வணங்குவார் பொருளறிவார் மார்க்கமாக
வடிவாக அயச்செம்பு செய்வார்பாரு
இணங்குவார் ரசக்குளிகை காட்டுவார்பார்
இதமாகச் சாபமணி செய்வாரப்பா
கணங்குவார் தர்மங்கள் மிகவுஞ்செய்வார்
காரியமாய்த் தாம்பூரச் சுண்ணஞ்செய்வார்
குணங்காமல் மலிகலிலே சஞ்சரிப்பார்
கூரறிவா யிருந்திடுவார் கொள்கைதானே. (800)

கொள்கையாய் ஈபிமாரைத் தொழுதுபோற்றிக்
குண்டலியைத் தானசைத்துத் தீன்தீனென்பார்
வள்கையாய் ரொட்டிதின்பார் சந்தோஷிப்பார்
வாதங்கள் மிகச்செய்வார் வருத்தமில்லார்
உள்ளபடி செய்தமே கடையில்விற்பார்
உற்றுணர்வார் நூல்மர்மங் கண்டுதேறி
அள்கையாய் சந்தோஷ மிகவேசெய்வார்
ஆடுவார் பாடுவார் ஈபிமார்தானே. (801)

தானென்ற சகலநூ லெல்லாம்பாடிச்
சமூசயங்க ளில்லாமற் சுண்ணக்காண்டம்
வானென்று பாடியே வாதமெல்லாம்
வகைகண்டு துகைகண்டு வருத்தமில்லா
ஈனென்று கைபாக வரிசைசொன்னேன்
ஈதாக்கள் ஈபியினுட வழக்கம்பாடி
சானென்ற அறுநூறைக் குருக்கிநானும்
சரிபாகப் பாடுமின்னூல் மூன்னூறுமுற்றே. (802)

யாகோபு சுண்ணம் கா.

முற்றிற்று.

உ குமரன் துணை.

## புத்தக விளம்பரம்.

1. அகஸ்தியர்பரிபூரணம் மூலமும் அதன்சூத்திரம் உரை 0—6—0
2. ஷை பூரணச்சூத்திரம் மூலமட்டும் ... ... ... 0—6—0
3. ஷை வைத்தியரத்தினச் சுருக்கம் உரையுடன் ... 0—8—0
4. ஷை பரிபாஷை மூலம் ... ... 0—8—0
5. ஷை செந்தூரம் மூலம் ... ... ... 0—8—0
6. ஷை அமுத கலிகியானம் மூலமட்டும் ... ... 1—0—0
7. ஷை வைத்திய காவியம் மூலமட்டும் ... ... 0—12—0
8. சட்டை முனிவர் முன்ஞானம் பின்ஞானம் மூலம் 0—6—0
9. பிரம்மமுனிவர் வைத்தியம் மூலமட்டும் ... ... 0—8—0
10. புலிப்பாணி வைத்தியம் மூலம் உரையுடன் ... 0—10—0
11. இராமதேவர் சிவயோகம் மூலம் ... ... 0—6—0
12. சுப்பிரமணியர் ஞானம் மூலம் ... ... 0—6—0
13. ஷை ஞானம் மூலம் ... ... ... ... 0—10—0
14. உரோமரிஷி பரிபாஷை மூலம் ... 0—8—0
15. நந்திகண்டு 300 ... ... ... 0—8—0
16. சுத்திகருக்குவடை மூலம் 0—8—0
17. பூகி முனிவர் வைத்தியம் மூலம் ... ... ... 0—12—0
18. தெட்சணாமூர்த்தி திருமந்திரம் 1500 ... ... 1—8—0
19. மச்சமுனிவர் 800 0—8—0
20. ரோமரிஷி 500 0—8—0
21. திருவள்ளுவர் கற்பம் 300 ... ... 0—8—0
22. புலஸ்தியர் கற்பம் 300 ... ... 0—8—0
23. ஷையார் வாத சூஸ்திரம் 300 ... ... 0—8—0
24. தேரையர் வைத்தியம் 1001 ... 0—10—0
25. தனவந்திரி தைலம் 500 ... 0—7—0
26. கொங்கணர் கடைக்காண்டம் 300 ... 0—6—0
27. தனவந்திரி குருநூல் 200 ... 0—7—0
28. போகர் வைத்தியம் 700 ... 0—7—0
29. ஷை சரக்குவைப்பு 800 ... 0—10—0
30. அகஸ்தியர் வல்லாதி 600 ... 0—8—0
31. கெருடாரூடம் கெருட பஞ்சாட்சர ஆரூடம், சத்தியாரூடம், மந்திரசக்கரங்களுடன் ... 0—12—0
32. சிவாரூடம், தேவியாரூடம் காகாரூடம் மந்திர சக்கரங்களுடன் ... ... ... 0—12—0
33. சித்திராரூடம், சர்ப்பாரூடம், மந்திராரூடம் மந்திர சக்கரங்களுடன் ... ... ... 0—12—0
34. மேற்கூறிய 9 ஆரூடங்கள் மந்திர சக்கரங்களுடன் ஒரே கட்டடம் காலிக்கோ பயிண்டு ... 1—8—0

☞ இ. ராம. குருசாமிக் கோன்,

# விளம்பரம்.

## இராமதேவரென்ற யாகோபு அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய வைத்திய வாத சாஸ்திரங்களின் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 1 | பாகோபு வைத்திய சிந்தா மணி ... ... | 700 | |
| 2 | ஷை சூஸ்திரம் | 50 | |
| 3 | ஷை லோக சேந்தூரம் | 300 | |
| 4 | ஷை சேந்தூர சூஸ்திரம் | 155 | |
| 5 | ஷை சேந்தூர சூஸ்திரச் சுருக்கம் ... | 55 | |
| 6 | ஷை சுண்ணக் காண்டம் | 600 | |
| 7 | ஷை சுண்ணம் ... | 300 | |
| 8 | ஷை சுண்ண சூஸ்திரம் | 150 | |
| 9 | ஷை சுண்ண சூஸ்திரச் | 55 | |
| 10 | ஷை வாதக்களங்கு | 300 | |
| 11 | ஷை பஞ்சமிதத்திரம் | 306 | |
| 12 | ஷை வாத வைதத்தியம் | 400 | |
| 13 | ஷை வைத்தியம் ... | 300 | |
| 14 | ஷை வைத்தியசூஸ்திரம் | 50 | |
| 15 | ஷை தண்டகம் ... | 110 | |
| 16 | ஷை இடையாகம் | 16 | |
| 17 | ஷை செய்பாகம் | 16 | |

ஷை சாஸ்திரம் 17-க்கும் கல்லாடர் அரும்பதவுரைம்ஆக 12 புத்தகமாக அச்சிட்டிருக்கிறது மொத்தமாய் வாங்குபவர்களுக்கு ரூ. 7-0-0 வீதம்கொடுக்கப்படும்

இந்த அரிய சாஸ்திரங்களை வைத்தியவாத வல்ல நிபுணர்கள் ஒவ்வொருவரும் வாங்கிவாசித்துக் கைபாக செய்பாக எடைபாக முறைகளைக்கண்டு நன்கு தெளிந்து ஔடதங்களைச்செய்து முடித்துப் பிரயோகஞ் செய்வீர்களெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

## இராமதேவர் திருவாய்மலர்ந்தருளிய வைத்திய வாத சாஸ்திரங்களின் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 1 | இராமதேவர்வைத்தியம் | 1000 | |
| 2 | ஷையார் ஜாலம் ... | 800 | |
| 3 | ஷையார் நிகண்டு ... | 500 | |
| 4 | ஷையார் கருக்கடை.... | 500 | |
| 5 | ஷைகுருநூல் பரிபாஷை | 300 | |
| 6 | ஷையார் சிவயோகம் ... | 200 | |
| 7 | ஷையார் தண்டகம்... | 110 | |
| 8 | ஷையார்தண்டகபட்சணி | 109 | |
| 9 | ஷையார் பரஞானகேசரி | 100 | |
| 10 | ஷைவைத்திய சூஸ்திரம் | 83 | |
| 11 | ராமதேவர் சாக்குவைப்பு | 50 | |
| 12 | ஷை அஷ்டாங்கயோகம் | 50 | |
| 13 | ஷை மூப்புசூஸ்திரம்... | 31 | |
| 14 | ஷை பரிபாஷைசூஸ்திரம் | 27 | |
| 15 | ஷையார் ஞானத்திறவு | 16 | |
| 16 | ஷை குருநூல் சூஸ்திரம் | 16 | |
| 17 | ஷையார் பூஜாவிதி ... | 10 | |
| 18 | ஷையார் ஞானம் ... | 10 | |
| 19 | ஷையார் பரிபாஷை ... | 18 | |
| 20 | ஷையார் வைத்தியம் ... | 6 | |

இந்த சாஸ்திரங்கள் என்னிடமிருக்க ஓலே பேட்டுப் பிரதிகளின்படி அச்சிட்டுக்கொண்டு வருகிறேன் கூடியசீக்கிரம்வெளிவரும்

எமது புஸ்தகஷாப்பில் இன்னும் வேண்டும் புத்தகதினுசுகள் தயாரிலிருக்கிறது. வேண்டியவர்கள் நேரிலும் வி. பி. மூலமாயும் கிரயத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

இ. ராம. குருசாமிக் கோன்,
புஸ்தக ஷாப், புதுமண்டபம் மதுரை.

ஓ

பரமபதி துணை.

# NEW CATALOGUE OF BOOKS.

## புதிய புத்தகக் கேட்லாக்

இ. ராம. குருசாமிக்கோனூர் ஸன்

புத்தகஷாப் புதுமண்டபம், மதுரை.

பச்சிலை மூலிகைகளின் தமிழ்ச்

## சித்தவைத்திய அகராதி.

( இது ஓர் வைத்திய பெரிய அகராதி. )

இதில் பச்சிலை, கடைச்சரக்கு, பஞ்ச பூதச்சரக்கு, உபரசச்சரக்கு 120 பரிபாஷைப் பெயர்கள், 5 உப்புவகை இனங்களையும், உப்பாகுஞ் சரக்குகளின் விபரத்தையும் வகாரம், செந்தூரஞ் செய்ய சரக்குகளின் உருக்கின சத்துருமித்துருவையும், புளியாகும் சரக்குகளின் விபரத்தையும், 64-பாஷாணங்களின் பெயர்களையும், அவைகளின் சத்துரு மித்துருவையும், நிகண்டுகளின் பரிபாஷைப் பெயர்களையும் விபரமாய்க் கூறியுள்ளது சித்தர் நூல்கள் ஆராய்ச்சிசெய்வோர்களும், வைத்தியஞ்செய்ய ஆரம்பஞ் செய்வோர்களும் இப்புத்தகத்தை வாங்கிப் பார்க்க வேண்டியது அவசியமாகையால் ஒவ்வொருவரும் வாங்கிப்படித்துப் பார்த்து, இதின் உண்மையை அறிந்து மருந்துகள் செய்து பயனடையக் கோறுகிறேன். 280-பக்கங்கள்கொண்ட கலிக்கோபயிண்டு சுத்த பதிப்பு

புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0

# திருவள்ளுவர் கற்பம் 300

இதில் நாதாந்த சாரம் 100. கற்பக்குருநூல் 50. முப்பூ சூஷ்திரம் 30. வாத சூஷ்திரம் 16. முப்புச்குரு 11 வைத்தியசூஷ்திரம் 100 ஆக 7-சாஸ்திரங்கள் அடங்கியது. திருவள்ளுவர் பாடிய ஞானவெட்டி 1500க்கு சூஷ்திரமாகப் பாடியுள்ள சாஸ்திரம் இதுவேயாகும். இதில் குருமுடிக்கும் பாகங்களும், செயநீர் முடிக்கும் பாகங்களும் பூநீர் விபரங்களும், அபூர்த தாரணையின் நுட்பமும் முப்பூ இன்னதென்ற விபரமும், வழிலமார்க்கமும் தெளிவாகக்கூறியுள்ளது புத்தகம் 1-க்கு விலை ரூ 0—14—0

# யூகிமுனிவர் 1200

கும்மி 1000, பரிபூரணம் 200 இரண்டும் சேர்ந்தது.

இம்முனிவரால் பாடியுள்ள சாஸ்திரங்கள் அநேகமாயிருப்பினும் ஒவ்வொரு நூல்களும் ஒவ்வொருவர் கையடக்கமாய் வெளிவராமல் இருந்ததில் இந்த சாஸ்திரங்கள்மட்டும் என்னிடம் கிடைக்கப்பெற்று உலக நன்மையைக் கருதி அச்சிட்டு வெளியாக்கியுள்ளேன். இதில் வாதம், வைத்தியம். ஞானம், முப்பு விபரங்கள் கூறியிருக்கின்றன. கலிக்கோ பயிண்டு புஸ்தகம் 1-க்கு விலை ரூ 2—0—0

# இராமதேவர் வைத்திய காவியம் 1000

இதில் கற்பமுறைகளும், சத்துரு மித்துருச் சரக்குகளும், தைலமுறைகளும், வைத்தியமுறைகளும், அஷ்டகர்ம விபரங்களும், கருமான விபரங்களும், பஞ்சபூதங்களின்விபரமும், பற்பம்செந்தூரம், சுண்ணம் செய்முறை பாகங்களும், அஷ்டாங்க யோக முறைகளும், ஞானங்களும் கூறியிருக்கிறது புஸ்தகம் 1க்கு விலை 1—0—0

# அகஸ்தியர் கௌமதி நூல்

இக்க சாஸ்திரம் இதுவரை வெளிவராமல் பழைய ஏட்டுப்பிரதி யாக ஒரு சுவாமியாரிடமிருந்தது ஷெயார் ஒருவருக்கும் வெளியி டாமல்தன்னனுபவத்தில் வைத்துக்கையாண்டுவந்ததை மகா-ரா-ரா-ஸ்ரீ இ. ராம. குருசாமிக்கோனரவர்கள் சுவாமியாரிடம் போய் வேண்டும் பொருள் கொடுத்து வாங்கி அதைப் பிரதி பண்ணி யாவரும்பார்த்துப் பயனடையுமாறு அச்சிட்டு வெளியிடப்பட்டது. வைத்தியம், வாதம் மாந்திரீகம் முதலான பாகங்கள் சுருக்க முறைகளாகச்சொல்லியிருக்கி றது. வெகு அருமையான சாஸ்திரம்

புத்தகம் 1க்கு விலை அணு 0—12—0

அகஸ்தியர் பன்னீரா யிரத்துக்குச் சூஸ்திரமான

# பன்னிருகாண்டம்.

இது அகஸ்தியர் பன்னீரா யிரத்துக்குச் சூஸ்திர மாகப் பன்னிருகாண்டங்களாகப் பாடியுள்ள சாஸ்திரம் 1.-வது வைத்திய காண்டம் 2.-வது வாத காண்டம் 3.-வது சுண்ணக்காண்டம். 4.-வது செந்தூரக்காண்டம் 5.-வது பற்பகாண்டம் 6.-வது தைலக் காண்டம் 7.-வது கற்ப காண்டம். 8.-வது யோக ஞான காண்டம். 9.-வது தீட்சாவிதி காண்டம். 10.-வது சாபநிவர்த்தி காண்டம் 11-வது ஜாலகாண்டம். 12-வது மந்திர காண்டம். ஆக பன்னிருகாண்டம் சுருக்க சூஸ்திரமாயுள்ளது.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—10—0

## அகஸ்தியர் கற்ப முப்புக் குரு நூல்

இதில் கற்ப விதிகளும் முப்பு முடிக்கும் விபரமும் பற்பம் செந்தூர கைபாகஞ் செய்பாக முறைகளும் சுண் ணம் மெழுகு தைலம் வாலை பூசை நாற்பத்தி முக்கோண சக்கரத்தின் பூஜா விதிகளும் கற்ப தீட்சை முறைகளும் தெளிவாகச் சொல்லி யுள்ள சாஸ்திரம்.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—10—0

இதுவரை வட்டுப்பிரதியாயிருந்து புதிதாக அச்சிட்ட

# அகத்தியர்பரிபூரணம் 1200

இந்நூல் ஞானம், யோகம், இன்னதென்று அவரவர்களே எளிதாகத் தெரிந்துகொள்வதோடு தன்னேத்தானறிந்து ஞான யோக சாதனையைந்து வெகுகாலம் ஜீவித்திருக்கவும், கற்பதேகி யாகவும், அநேக வைத்தியம், வாதம், சத்துரு-மித்துருவிபரங்கள்சொல்லியுள்ளது புதிய சாஸ்திரம் கலிக்கோபயிண்டு விலை ரூ 2—0—0

## அகஸ்தியர் தற்க சாஸ்திரம்

இது அகத்திய முனிவரால் புலத்தியருக்கு உபதேசஞ் செய்தது இதில் பதினெண் சித்தர்களாலும் பாடிய வைத்திய வாத யோகஞான நூல்களின் பரிபாஷைப் பெயர்களையும், அநேக மர்மங்களுக்குதாத் பரியங்களையும் விபரமாகக் கூறியிருக்கிறது. விலை அணு 0-10-0

17-சாஸ்திரம் அடங்கிய இராமதேவரென்ற

# யாகோபு வைத்திய கோர்வை

இராமதேவ ரிஷியாக இருந்துபின்பு மக்காவுக்கு சென்றுநபிமார்களுடன் பேசி அவர்கள் இவர் திறமையையும் சாஸ்திர ஆராய்ச்சியும் தெரிந்து யாகோபு என்று பெயர்கொடுத்தார்கள். பின்பு யூனானிமுறைகளையும், தமிழ், முறைகளையும் கவனித்து அநேக வைத்தியங்களும், வாதம், யோகமுறைகளும், ஞானமும், நாடி விபரமும், சரக்குச்சுத்திகளையும், 17-சாஸ்திரங்களாகப் பாடியிருக்கிறார். இந்த சாஸ்திரத்தை அநேகர்வாங்கி செம்ப அனுபவ முறையாகக் கையாண்டு வருகிறார்கள் 17-சாஸ்திரம் சேர்ந்த கலிக்கோபயிண்டு விலை ரூ 9—0—0

இந்தப் பதினேழு சாஸ்திரங்களையும் பனிரெண்டு புஸ்தகங்களாக தனித்தனியாகவும் பயிண்டுசெய்திருப்பதால் வேண்டியவர்கள் தனித்தனிப்பிரதியாகவும் கிரையத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

குரு. இராமசாமிக்கோன் புக்ஷாப் புதுமண்டபம் மதுரை.

## கொங்கணர் நடுக்காண்டம் 500

கொங்கணர் பாடியுள்ள மூக்காண்டம் 1500 ரில் கடைக்காண்டம் 500 கிடைத்ததை மாத்திரம் வெகுகாலாக அச்சிட்டு விற்பனையாகி வருவது யாவருக்கும் தெரிந்தவிஷயம். பாக்கியுள்ள முதல்காண்டம் 500ம், நடுக்காண்டம் 500ம் வெகுகாலமாகக் கிடைக்காம லிருந்து இப்பொழுது ஒரு எட்டுப்பிரதி நடுக்காண்டம் 500 மாத்திரம் கிடைத்து. அதை அச்சிட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. அநேக கனவான்கள் பார்க்கவேணுமென்று எதிர்பார்த்திருந்த அரிய சாஸ்திரங்களில் இதுவும் ஒன்றேயாகும். புத்தகம். 1-க்கு விலை அணை 0—12—0

## கருவூரார் வாதகாவியம் நொண்டி 700

இதில் கற்பம், வயித்தியம், வாதம், ஞானம், யோகமுதலிய பாகங்களை கொண்டிச் சித்தாகவும், ஆனந்தக் களிப்பாகவும், அம்மானைப் பாவாகவும், சிந்தாகவும் இம்மாதிரி பல வர்ணமெட்டுகளாய் வேடிக்கை விநோதமாகச் சூட்சமாய்ச் சொல்லிய சாஸ்திரம்.

புஸ்தகம் விலை ரூபாய் 0—14—0

## விஷவைத்திய மென்னும்
## "ஒன்பதுவிஷ ஆரூடம்"

இதில் ஒன்பதுவிதமான விஷ ஆரூடசாஸ்திரங்களைச்சேர்த்து ஒரே புத்தகமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பாம்பு. தேள், நட்டுவக்காளி, நரான், செய்யான், வண்டு, அரணை, எலி, நாய், குரங்கு, நரி, முதலானவைகள் கடித்து விஷமேற்பட்டால் பச்சிலை மூலிகைகளினாலும், கடைச்சரக்குகளினாலும், விஷத்தை நீக்குவதற்குஇலகுவான முறைகளாய்ச் சமயோசிதம்போல் செய்வதற்கான விதமாய்க் கூறியிருப்பதோடு மந்திர யந்திர பூஜாவிதிகளும், விபரமாய்ச் சொல்லியிருக்கிறது எமது மூதாதைகள் கையாண்டு அநுபவித்துவந்த உண்மையான சாஸ்திரம். சுத்தப்பதிப்பு 392-பக்கங்கள் கொண்ட கலிக்கோ பயிண்டு

பெரிய புஸ்தகம் 1-க்கு விலை ரூபாய் 2...0...0

குரு இராமசாமிக்கோன் புக்ஷாப் புதுமண்டபம், மதுரை

# காக புசுண்டர் 1000

சித்தர்களில் ஒருவராகிய புசுண்ட மகாரிஷி என்பவர் பிரளய காலத்தில் கல்லாலின்மேல் இருந்து ஒவ்வொரு பிரளய காலமும் பார்த்துவந்தவர். இவர் அநேகசாஸ்திரம் பாடியிருக்கிறார். ஆனால் இது வரை சில சாஸ்திரமட்டும் அச்சுக்கு வந்திருக்கிறது. ஷியாரால் பாடியதில் முக்கியமான இப்புசுண்டர் பெருநூல் காவியம் 1000. இது வரை ஏட்டுப்பிரதியாயிருந்து இப்போதுதான் புதிதாக அச்சிட்டிருக் கிறது. இதில் யோகம். ஞானம் அமுதகாரணி வாசி விபரமும் கற்பம் என்பது தன்னுள்ளே முடிந்திருக்கிறது என்ற விபரமும் முதலிய இன்னும் அநேக மர்மங்களும் அடங்கியுள்ள சாஸ்திரம். 250-பக்கங் கொண்ட கலிக்கோ பயிண்டு. புஸ்தகம் விலை ரூ 2—0—0

# போகர் கற்பம் 300.

இதில் அமுரி கற்பம் சாப்பிடும் விதமும் அந்த அமுரி கற்பத்தை எந்த விதத்தில் முரித்துச் சாப்பிடு கிறது என்பதும் அதை யெந்த பாத்திரத்தில் உப யோகிப்ப தென்பதும் கற்பம் சாப்பிடுங் காலத்தில் ஏற்ப டக்கூடிய சூடு சோப தாபங்களுக்கு வேண்டிய கஷாயங் களும் அதுசமயம் ஸ்நானம் செய்யும் முறையும் பத்திய முரிவு யேற்பட்டால் அதற்கு வேண்டிய பக்குவங்களும் கற்பம் சாப்பிடும் போது புளி உப்பு பெண்போகம் கூடா தென்பதின் காரணமும் அங்குற்றங்க ளேற்பட்டால் அத ற்கான சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய வகையும் கற்ப மூலிகை விபரங்களும் கருந்துளசி கருநெல்லி கரு நொச்சி இவைகளை நாமே உண்டு பண்ணிக்கொள்ள வேண்டிய முறையும் வாத முறைகளுக்குத் தைல வகை களும் சுத்தி முறைகளும் சிதம்பரத்தில் தங்க விக்கிரகங் செய்த விபரமும் சொல்லியுள்ளது இது போகர் ஏழுத் தில் சேராத புதிய சாஸ்திரம் விலை அணு 0—12—0

# புலஸ்தியர் கற்பம் 300.

இதில் கற்ப சாதனைகளின் விபரங்களையும் போக ஞான மார்க்கத்தையும் அகார உகார விபரங்களையும் வாசி யோகஞ் செய்யும் முறைகளையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாகக் கூறியுள்ளது ஓலை யேட்டுப் பிரதியிலிருந்து அச்சிட்டது புத்தகம்1-க்குவிலை 0--10--0

## புலஸ்தியர் வாதசூஸ்திரம் 300.

இந்த சாஸ்திரத்தில் ரசவாதத்துக்குரிய செம்பு வதை, செம்புச் செந்தூரவதை, திருசுச்செம்பு எடுக்கு விதம், கெந்தக தைலம் காகரச கெந்தி தைலத்தின் பெருமையும் அதனுல் மாற்று உயரும் முறையும் தங்க உரம், வெள்ளி உரம் செய்யும் முறைகளும் சரக்கு கட்டுவகைகளும், செந்தூரப், பஸ்பம், சுண்ணம், இவைகளை அது போக முறைகளாய்ச் செய்து கொடுத்து குணமாகும் வியாதிகளை யெம்பவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை ரூ 0—10—0

## தன்வந்திரி வைத்தியக் குருநூல் 200

இதில் தன்வந்திரி பகவான் பாடிய சாஸ்திரத்திற்கெல்லாம் நிறவுகோல் போல் ஷேபாரால் சொல்லிய சாஸ்திரத்தில் பற்பம், செந்தூரம், மாத்திரை, தைலம், சூரணம், சரக்குக்கட்டு வகைகளை எளிதாகச் செய்துகொள்ளக்கூடிய முறைகளாகத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. புஸ்தகம் 1-க்கு விலை அணு 0—8—0

## நந்தீஸ்வரர் நிகண்டு 300

இதில் உப்பு இன்னதென்றும், வீரம், பூரம், வெள்ளைப் பாஷாணம் என்று சொன்ன சரக்குகளின்னதென்றும் அதினுல் வகாரம் முடியுமென்றும், மூலிகை யென்ற சரக்குகளின் விபரமும், ஓம் என்றதின் பொருள் இன்னதென்றும் இன்னும் அநேக பரிபாஷைக ளெல்லாம் விபரமாகச் சொல்லி யிருக்கிறது.

புஸ்தகம் 1-க்கு விலை அணு 0—8—0

## சோலைமலை பெரிய அழகர் வர்ணிப்பு

இதில் சோலைமாமலையி லெழுந்தருளி யிருக்கும் அழகமலை யாண்டாரின் அலங்காரச் சிறப்பும், குதிரையின் அலங்காரச் சிறப்பும், மலை விசேடமும், தீர்த்த விசேடமும், பதினெட்டாம்படி விசேடமும், மதுரைக்கு வந்து மண்டூகமாமுனிக்கு முத்திகொடுத்து வண்டியூர் சென்று திரும்பவும் அழகமலை சென்ற முதலான சகல வைபவங்களையும் பத்து அவதாரங்களையும் வர்ணிப்புச் சுத்தமாக யாவருக்கும் தெரியும்படி அலங்காரமாய்ச் சொல்லப் பட்டிருக்கிறது.

புஸ்தகம் 1-க்கு விலை அணா 0—3—0

## பாகவத அம்மானை வர்ணிப்பு.

ஐயா நீங்கள் இதுவரையிலும் எத்தனையோ அதிகவிதமான வர்ணிப்புகளை படித்திருந்தாலும் பெருமை பொருந்திய இந்தப் பாகவத அம்மானை வர்ணிப்பை ஒருமுறை வாங்கிப் படிப்பீர்களானால் இதனலங்காரம் தங்களுக்கே நன்கு தெரியும் தற்புகழ்ச்சியன்று அவசியம் வாங்கிப் படித்து உண்மையறியுங்கள்.

புத்தகம் 1-க்கு விலை அணா 0—6—0

## கோடாங்கி மாலை. 1-2 பாகங்கள்

இது கோடாங்கி அடிப்பவர்களுக்கும், சுவாமி அருள் பொங்கிக் குறிசொல்பவர்களுக்கும் சுவாமி ஆடிகளுக்கும், ஆரூடம் சொல்பவர்களுக்கும், பேயோட்டுபவர்களுக்கும், முத்துக்குறி சோதிடம் பார்ப்பவர்களுக்கும் மூக்கியமானது. பலதேவதைகளின் பெயர்களும் கிராமங்களின் பெயர்களும் குறிசொல்லுகிற விபரங்களும் ஆங்காங்கு தெளிவாக யாவரும் அறியும் வண்ணம் கூறியிருக்கிறது.

பாகம் 1-க்கு விலை அணா 0—4—0

அருணகிரிநாத சுவாமிகளால் இயற்றிய

## பெரிய கந்தரனுபூதி

யந்திர மந்திர சக்கர பூஜாவிதிகளுடன் கூடியது.

புஸ்தகம் 1-க்கு விலை அணா 0—4—0